உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சீகாழி - சட்டநாதவள்ளலார்

அருளிய

# சதாசிவரூபம்.

## மூலமும் - உரையும்.

இஃது

அஷ்டாவதானம்

**பூவை - கலியாணசுந்தரமுதலியாரால்**

பரிசோதிக்கப்பட்டு,

இவர் மாணாக்கர்

**வல்லை - சண்முகசுந்தரமுதலியாரால்,**

சென்னை:

ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சருவசித்து ௵ மகரரவி.

1888.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

அநாதிமுத்தனாகிய பெருமான் அநாதிபெத்தர்களாகிய ஆன்மாக்களின் அநாதிமலத்தை நீக்குவான் அநாதியிலேயே அநாதிசதாசிவமூர்த்தியாய் எழுந்தருளித் தனது ஈசானாதி திருமுகங்களினின்றுந் தந்த காமிகாதி இருபத்தெட்டாகமங்களு ளொன்றாய வாதுளாகமத்தினின்றுந் தமிழில் சூத்திரூபமாய் மொழிபெயர்த்துச்சதாசிவரூபமென்னுமிந்நூலைச் சீகாழிச்சட்டநாதவள்ளலார் உலோகோபகாரமாக இயற்றியருளினர். சிவஞானபோதமாதி ஞானசாத்திரங்கள் பதினான்கினிற்பழகும் பூர்வபுண்ணியமுடையாராகிய சுத்தாத்விதசைவர்கட்கு இந்நூல் அத்தியாவசியமாய் வேண்டியிருத்தலின், இதனை வெளிப்படுத்துவான் ஆவல்கொண்டு சேகரித்த கரலிகிதபிரதிகள் இரண்டில் முதற்கிடைத்ததற்கு ஆதிகண்டிலேம். இரண்டாவது கிடைத்ததற்கு அந்தங்கண்டிலேம். ஆயினும் இரண்டினையுஞ் சேர்த்து ஒருவாறு திருத்திவருகையில் யாழ்ப்பாணம் சைவப்பிரசாரணர் ஸ்ரீமத் செந்திநாதையரவர்கள்

சுத்தப்பிரதி யொன்றுகொடுக்க, இதனையேயாதாரமாய்க்கொ
ண்டு ஆராய்ந்து ஆங்காங்கு ஆகமசம்பந்தமாய் நேர்ந்த சமு
சயங்கள் திருவண்ணாமலையாதீனம் ஸ்ரீமத் ஆறுமுகத்தம்பிரா
ன்சுவாமிகளால் நீங்கப்பெற்று அச்சிட்டுமுடித்தனம்.

இதுபோன்றபலசாத்திரங்களின்னும்பற்பலவுள. இவற்
றுட் சென்னையிலுள்ள வித்வான்களிடத்துஞ் சிற்சிலவுள.
இவ்வித்துவான்களோ அவற்றையச்சிடத்துணிகின்றாரில்லை.
அச்சிட்டுவெளிப்படுத்தும்ஆவலுடையாருக்குங் கொடுக்கின்று
ரில்லை. ஆங்காங்குஅலைந்துஅரிதுசம்பாதித்துஆய்ந்துஅச்சிட்
டபின்அதுகுறையிதுமிகையெனப்புறங் கூறிப்பூரிக்கின்றனர்.
அழிகின்ற நிலையிலிருக்கு மரியகிரந்தங்களை யச்சிற்கொண
ர்வ தறிஞருக்கழகன்றோ? அந்தோ! இவ்வித்துவான்கள்
தங்கள பெட்டிகளிற் சேமித்துவைத்திருக்கு மேடுகளை யெக்
காலத் தெந்தப்பொருட் டுபயோகப்படுத்தக் கருதியிருக்கின்
றனரோ அறியேம்! அறியேம்!! இவ்வளவும் நமதுகிரந்தங்
களிடத்துள்ள அன்பின்மிகுதியாற் சொல்லத்துணிந்தேம்,
இவர்கட்கு ஈச்சுரன் கிருபைபுரிவாராக.

இந்நூலின் சித்தாந்த முரண்கள் ஏதாவதுளதாக நமது
சைவர்கள்காணின் அவற்றை நேரே நமக்குத் தெரிவித்தால்
இரண்டாம்பதிப்புத் திருந்தியச்சிட நிச்சயத்திருக்கின்றனம்.

ஸ்ரீ நவசித்து ஐப்பசி மீ டு - க.

௨

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப்பாயிரம்.

மலைவளர் குங்கும வனமுலை சுரந்த
கலைவளர் ஞானங் கதிர்மணி வள்ளத்
தநங்கிலை யமுதுசெய் தமலனை நோக்கி
யென்னுளங் கவர்ந்தவ னிவனென் றேத்திய
மறைத்தமிழ்க் கவுணியன் மலர்க்கழல் வணங்கிப்
பரைமுதற் பஞ்ச சத்தி களையும்
விரைவுட னைந்தொழில் விரிப்பது வேண்டி
யாக்கி யவாக ளிடத்தி லருட்சா
தாக்கிய மைந்தாய்த் தம்மி லவைதிரண்
டெழிற்றெழிற் சாதாக் கியமா யதுமிவர்
நிழற்கதிர்ச் சகள நிட்கள மாகையிற
சுத்தா சுத்த தத்துவ மிவர்தமை
யொத்தா சரிக்கு மொழுக்கமு மிவரே
யனைத்தா தார மாகையு மிவர்பாற்
றனிச்சிவன் வியாபிக மென்ற தன்மையு
மிவர்தமை யீர்ச்சிந் தேத்து முறைமையுங
கவலையில் வாதுளங் காமிக மென்னு

# சிறப்புப்பாயிரம்.

மிரண்டு தந்திரத் தெங்கோ னருளாற்
றிரண்ட பொருள்களைச் சீர்பெறத் தொகுத்துத்
தண்டமிழ்த் தொடையாற் சதாசிவ ரூபமென்
றொண்டிறற் பனுவ லுளங்கனிந் துரைத்தோனை
ஞானக் குழவியு நாவினுக் கிறைவனு
மூனமி லாரனு மொருவடி வாகிச
சிரபுரத் துதித்தோன் றிருநெறிக் காவலன்
றருசிவ ஞான சதுர பாடிக
னஞ்சுக போத மருள்புரி வள்ளற்
கஞ்சுக நாதன் கலைத்தமிழ்க் கடலே.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சதாசிவரூபம்.

---

## சூத்திரம்.

### நூல்.

உயாமறை புகழ்சிவ ஞெங்கு சதாசிவ, னியலு மகேச
னெனமுன் றுமவை, யருவே யருவுரு வுருவா யடை
வே, யிதுணை யொன்றைந் தையைந் தாகி, யொருதொ
கை முப்பத் தொன்று கும்மே.

எ-து வேதத்தின் முடிவாகிய மகாவாக்கியம் புகழ்கின்ற நின்மலசிவம் அதிலான்ம விரக்கமே வடிவாகிய சதாசிவம் அந்த வான்மவிரக்கமே வடிவாகி அவற்றை நடத்தும் மகேசுரம் என மூவகையாகும். இவைகளில் நின்மலசிவம் வடிவறுதியா யிருக்கும். சதாசிவம் சத்திகாரியத்துடனே கூடிய வடிவும் வடிவறுதியுமா யிருக்கும். மகேசுரம் அந்தச்சத்திகாரியமான வயிந்தவத்தை நடத்தும் வடிவா யிருக்கும். வாக்கு மனாதீதமான சிவமொன்றுஞ் சாதாக்கிய மைந்

தும் மகேசுரம் * இருபத்தைந்தும் ஆக முப்பத்தொன்றுஞ் சிவனுடைய வுண்மையான தத்துவங்களென்பதாம் (௧)

*அவற்றுள்.— நிகழ்சிவம் பராபரஞ் சூக்குமு நித்தியமெங்கும் பூரண நாசமில் லாததது, நின்மல வனுபவ நிகழ்பிர மாணந், தன்னி லுணர்ந்திடு தற்கரி தானது, சொன்னவில் குணங்களுநங் கூடா ததுவே.*

எ-து. இம்மூவகையில் மூர்த்திய சிவத்தை விளங்கச்சொல்லுமிடத்து முற்சொன்ன சிவம் சுத்தமாதலால் சிவம் என்றது பசுவை நடத்துதலால் பராபர மென்றது, உயிர்க்குயிராய் நின்றாலும் போதத்தால் எட்டப்படாதாகையால் சூக்குமம் என்றது, தனக்கோர் காரணமின்மையால் நித்தியம் என்றது. சர்வவியாபியாகையால் எங்கும் பூரணம் என்றது. அறிவிக்குந்தன்மை யொழியாதாகையால் நாசமிலி என்றது. தனது சத்தியினால், பாசத்தொழிலை நடத்தினும் அதில் தோயாதவனாகையால் நின்மலம் என்றது. இன்னதன்மையனென்று உவமிக்கவொண்ணாதாகையால் அனுபவாதீதம் என்றது.

---

* இருபத்தைந்தாவன— "சந்த்ரசேகரருமா மகேச ரிடபாரூடர்சபாபதி கல்யாணசுந்தரர், சாற்றுபிக்ஷாடனர் காமாரி சயவந்தகாரிதிரிபுரதகனரே, சிந்தைசெய்சலந்த்ராரி விதிதும் சர்வீரபத்திநர்ரசிமநிபாதர், திகழர்த்தநாரீசர் விக்ரதரகங்காளர் சீர்ச்சண்டிகேசனுக்ரர், நந்தலில்கறைக்கண்ட சக்கராபயப்பிரதா னவில்கசமுகானுக்ரகர், நவையில்சோ மாஸ்கந்த ரேகாவிடபாத ரருணனு தக்ஷணாமூர்த்தியே; பந்தமிலனங்கசுகபிரக்ஞமரி லிங்கோற்பர் பகரிருபத்தைவரும், பரவு தட்டர்கள் சிட்டநிக்கிரக வநுக்கிரகம் பணுமிறைகொண்மூர்த்தமிவையே". என்பதனாற் காண்க

அறியப்பட்ட அளவைப் பிரமாணங்களால் அறியவொண்ணாதாகையால் பிரமாணாதீதம் என்றது. சொல்லும் பெரியகுணங்களுக் கப்பாற்பட்டு அணுமயமாய் இருக்கையால் குணாதீதம் என்றது. ஆன்மாக்களுக்கு அனுக்கிரக நிமித்தமாக இப்பத்துத் தன்மைகளும் உடைத்தாகையால் நிட்களசிவமெனப் பெயர்பெற்றுப் பரமசிவத்தில் ஆயிரத்தொருகூறாயுற்றதென்பதாம். (உ)

அன்ன சிவமா யிரமா யதிலொன், றுன்னிய பரையதி
லாயிரத்தொருகூ, றுதியா யதிலோ ராயிரங் கூற்றொரு,
பேதமிச்சையதிலாயிரம் பிரிவொன், றிணங்கு ஞானம
தினொஞ் ஞூற்றொரு, பங்கு தொழிலிவை பஞ்சசத் திகளே.

எ-து. பரமசிவனைப் பிரியாத அருட்சத்தியானது பரசிவத்தில ஆயிரத்தொரு கூறான நிட்கள சிவனுடனே கூடிக் கிருத்தியத்தைத்திருவுள்ளததில் அடைப்பது பராசத்தி என்னப்படும். அதில் ஆயிரத்தொருகூறு வலியையுடைத்தாய்ப் பெத்த முத்திகளில் வியாபிப்பது *ஆதிசத்தி என்னப்படும். அதில் ஆயிரத்தொருகூறு வலியையுடைத்தாய் வடிவைப்பிரேரிப்பது இச்சாசத்தியென்னப்படும். அதில் ஆயிரத்தொருகூறு வலியையுடைத்தாய் அறிவைவிளக்குவது ஞானசத்தி என்னப்படும். அதில் ஆயிரத்தொருகூறு வலியையுடைத்தாய்ப்பஞ்சகிருததியத்தை நடத்துவது கிரியாசத்தி என்னப்படும். பஞ்சகிருத்தியங்களைத்திருவுள்ளததடைத்த பரமசிவனுக்கு இவ்வைந்துஞ் சத்திகளென்பதாம். (௩)

இவ்வகைச் சத்தி யியம்பிய வைந்துஞ், செவ்விய வுண்
மைச் சிவன்படைப் பாகும்.

எ-து. இப்பஞ்ச சத்திகளும் பரமசிவனுடைய பிரேரகமாகிய நிட்களமாயிருக்குமென்பதாம். (௪)

---

* ஆதிசத்தி = திரோதானசத்தி.

சத்தி படைப்பினி யொத்துரை செய்யில், யோகிகளதி
திகள் ஞானிக ளிவர்க, ளாகிய தியானத் தளவிடற் பொ
ருட்டாய், நிட்கள மதனிற் சகள நிறைந்திடு, மபபெ
யர்சாதாக் கியமென லாகும்.

எ-து. இனிச்சத்தி பிரேரகத்தைப் பொருந்தச சொல்லில
சீவன்முத்தர்க்கும், விரத்தராய சாதகர்க்கும், ஞானிகட்கும் அவரவ
ர்க் கேற்ற தியானத்தில் அளவிடுதல் நிமித்தமாக அவிகாரமான நிட்க
ளத்திலே சத்திவிகற்பமான கலைகளாலே தியானமூர்த்தியாக நிரம்பு
ந்த சாதாக்கியமென்பதாம். (௫)

* சாதாக் கியவகை தாஞ்சிவ மமூர்த்தி, மூர்த்தி கருத
தாகரும்மெனவைந், தோதிய பரைமுத லைந்திலுற்
பவ்மே.

எ-து. சிவசாதாக்கியம் பராசத்தியிலும, அமூர்த்தி சாதாக்
கியம் ஆதிசத்தியிலும், மூர்த்தி சாதாக்கியம் இச்சாசத்தியிலும், கர்த்
திரு சாதாக்கியம் ஞானசத்தியிலும், கன்மசாதாக்கியம் கிரியாசத்தி
யிலும் ஆகபஞ்ச சாதாக்கியம் முன்சொன்ன பஞ்சசத்திகளிடமாகத்
தோன்றுமென்பதாம். (௬)

எண்ணு சதாசிவ னீசன் பிரமனு, மொண்ணெறி யீசுர
னுயரீ சானனுந், தந்துரை சிவசா தாக்கிய முதலி
வ், வைந்தினுக் கைகர்தா மதிபர்க ளிவரே.

---

* இச்சூத்திரத்தில் பராசத்திக்கு முந்தின அருட்சத்தியாகிய
சிற்சத்தியையும் அதிற்றேன்றிய மகா சாதாக்கியத்தையும் விவரித்தி
லர். என்னை ? பரமசிவனுக்கு அதோமுகத்தில் நித்திலரையாதலானும்
அம்முகத்தில் பூசாங்கோரமும் அனுக்கிரகமுமின்றுதல் பற்றியென்க

எ-து. எண்ணுமிடத்துச் சதாசிவன் ஈசன் பிரமீசன் நன்மை நிலைய்த் தரும் ஈசுரன் மேலாகிய ஈசானன் இவர்கள் ஐவரும் உறைந்த சிவசாதாக்கிய முதலான பஞ்ச சாதாக்கியமும் அதிகதமாக அடைந்துள்ள மூர்த்திகளாம். இவர்கள் சாதாக்கியங்களை அந்தர்கதமாக உள்ளே பாவித்து வழிபட்டிருக்கையால் அதிபரென்பதாம். (எ)

பராபர மேபரஞ் சூக்குமாச் சூக்குமஞ், சூக்குமந் தூலந்
தூலஞ் சிவசா, தாக்கிய முதலிவ் வைந்தின் றன்மை.

எ-து. பரைக்குப் பரமாயிருப்பது சிவசாதாக்கியம், பரையுடனகூடிக் கிருத்தியத்தில் உததியோகத்தை யுடையது அமூர்த்தி சாதாக்கியம். சூக்குமமாகிய இச்சாஞானக்கிரியைகளுக்கும் அப்பாற்பட்டுள்ளது மூர்த்திசாதாக்கியம், சூக்குமமான இச்சையிலே தூலமான ஞானக்கிரியைகள் பொருந்தி ஞானபாவகமாய் உள்ளது கர்த்திரு சாதாக்கியம், தூலமான விந்துநாதங்கள் கூடியுள்ளது கருமசாதாக்கியம், காட்டத்தில் தோன்றின அக்கினி காட்டத்துக்கு மேற்பட்டிருந்தாற்போலச் சத்திகளில் தோன்றின சாதாக்கியங்களும் சத்திகளுக்கு மேற்பட்டிருக்கும் அக்கினிக்குக் காட்டம் உபாதானம் அல்லாதது போலச்சாதாக்கியத்திற்குச்சத்தி உபாதானமல்லவென அறிகவென்பதாம். (அ)

தந்துவ மூர்த்தி தரும்பிர பாவமேன், றித்தகை மூன்று
மியைந்திடு மிவையே, சிவசா தாக்கிய முதலிய தததுவ,
மவமில் சதாசிவ முதலேம் மூர்த்திக, ளொன்றிய போதீ
சானு திகளாய், நின்றன முறைநிரை நிறைபிர பாவம்.

எ-து. தத்துவமென்றும் மூர்த்தியென்றும், பொருந்திய பிரபாவமென்றும் மூன்றுவகையான் தகைமைப்பாட்டால் இசையச்

சொல்லப்படும். இவையே சிவசாதாக்கிய மென்னுந் தத்துவமும் சதாசிவ மென்னு மூர்த்தியும் பொருந்தினது ஈசானம். அமூர்த்தி சாதாக்கியமென்னுந் தத்துவமும் ஈச னென்னு மூர்த்தியும் பொருந் தினது சத்தியோசாதம். மூர்த்திசாதாக்கிய மென்னுந் தத்துவமும் பிரமீசனென்னும் மூர்த்தியும் பொருந்தினது வாமதேவம். கர்த்தரு சாதாக்கியமென்னுந் தத்துவமும் ஈசுர னெனனும் மூர்த்தியும் பொருந்தினது அகோரம். கன்மசாதாக்கிய மென்னுந் தத்துவமும் ஈசா ன னென்னு மூர்த்தியும் பொருந்தினது தற்புருடம் மூர்த்திமான் களைப்பைப் பிரபாவமென்பதாம். (க)

தத்துவ நிட்களஞ் சகள மூர்த்திக, ளிப்பிர பூாவஞ் சக
ளநிட் களமே, தத்துவ முயிரெனத் தகுமூர்த் திகளுட
லப்பிரபாவ முடலுயி ரெனுமே.

எ-து. சிவசாதாக்கியமுத லேந்தும் நிட்களமாய்த் தேகியாம் சதாசிவமுதலைந்தும் சகளமாய்த் தேகமாம் இவைகளை யொப்பான ஈசனாதிகளைந்தும் சகளநிட்களமாய் உடலுயிராமென்று சொல்லப் படுமென்பதாம். (கo)

பரைமுத லைந்திற் பத்திலோர் பங்காய் விரைவிறை யாக
நிகழ்ந்து பிரிந்தன, வருள்சிவ சாதாக் கியமுத லைந்தே.

எ-து. பராசத்திமுதலான ஐந்திலும் பத்திலொரு கூறு வலிமையயுடைய சிவசாதாக்கியமுத லைந்தும் அனுக்கிரக காரியமாக அடைவாய் பிறிந்ததென்பதாம். இனிச்சாதாக்கியங்களின் நாமரூபங் களைச் சொல்லில். (கக)

சிவசா தாக்கிய மென்ற திருப்பெய, ருவமையில் சுத்த
மாயையி லுண்டா, யதிரூக் குழுமா யளவறு மொளியா
ய், விதமிகு மபர மின்னின் விளங்கி, விதமுற வெங்கும்

12682

வியாபித் திடுமே, சாருமமூர்த்தி சாதாக் கியமென், றோ
திய ரூபை யாதலிற் பெயராய்க், கலைகடந் தொருலிங்
காதா ரமதாய்த், தொலைவில் கோடி சூரியரொளியாய்த்
தூணம தாகிச் சோதியி னூடே, காணரு யந்தர்க் கத
மூர்த்தி யதாய், மேலைத் திவ்விய லிங்க மெனவு, மூலத்
தம்பமெனவு மொழிந்தனா, எச்சமில மூர்த்தி சாதாக
கியமென், நிசசை குணத்துட னெய்தலி னெய்திக், கலை
யை யணுகலிற் காணு முருதரித், தெரிதழற் பிழம்பா
மிலிங்கம துருவா, யுசசியிலொருதிரு முகமு மமமுசத,
தச்சமின் முக்கணு மாயிருப் பதுவே. கர்த்திரு சாதாக்
கியப்பெயா ஞானமெனை, றதத னெழிற்பெய ராதலி ரு
லும, ஞான சதத * யிலகுத லானு, மூனமில் மறைக
ளுரைத்திடு மதுதான், சுத்த மாதலிற ராய்பளிங் கொ
ளியா, யிதத்கு திவ்விய லிங்கமு மாயதின், மத்தியில்
நாலு முகத்தொடு மன்னி, நலமிகு பன்னிரு நயன மு
டைத்தாய், வல்துளைக் சூல ப்பூவா ளபய, மிடதுகை
நாக மிலங்கிய பாசம், படுகணி வரத மெனும்படை
யேந்தி யொடிவி லிலக்கண முடனிருப் பதுவே, கன்ம
சாதாக் கியகா ரணப்பெயர், தொன்மைக் கிரியையிற்
றோன்றலி னுடைத்தா, நாத மயமெனு நவிலு மிலிங்க
மும், பேதமில் விந்து மயமாம் பீடமுஞ், சோர்வறக்
கூடித் தொழிற்பட் டிருக்கும்.

எ-து. சாங்கியாதீதை என்னும் பெயரை யுடைய உவமைய
ற்ற பராசத்தி சுத்தமாதலால் சுத்தமான சிவமென்னும் பெயரை யு
டைத்தாய்க் கரணவியாத்திக் கெட்டாத அதிசூக்குமமாய் அளவுப
டாத பிரகாசமாய்ப் பார்த்தவிட மெல்லாம் தானாகி யிருந்தவிதப்ப

* நல்குதல் எனவும் பாடம்.

ட்ட ஆகாசத்தின் மின்போல அரூபத்திலே தியானத்தால் விளங்க ப்பட்டுச் சர்வவியாபியாய் இருப்பது சிவசாதாக்கியம். இது லயத்தா னமென்று சொல்லப்படும் சாந்தியென்னும் பெயரையுடைய ஆதி சத்தி அரூபியாதலால் அமூர்த்தியென்னும் பெயரையுடைத்தாய் வடிவறுத்யாதலால் விகற்பமான கலைகளுக் கப்பாற்பட்டுத் தாணுகா ரமான ஒப்பற்ற இலிங்கமாய்க்குளுருத கோடிசூரியப் பிரகாசத்தை யுடைய இலிங்கத்தினடுவே காண்டற்கரிய வடிவைக் கற்பித்திருப் பது அமூர்த்திசாதாக்கியம் இது திவ்விய லிங்கமென்றும் மூலத்தம்ப மென்றுஞ் சொல்லப்படும். இவ்விலிங்கத்திலேயே சிருட்டி சங்கார காலத்தில் தோற்றமும் ஒடுக்கமும் உண்டாவது. ‡ இலிங்=லயம்,கம =தோற்றம். வித்தையென்னும் பெயரையுடைய இச்சாசத்தி சுத்த குணமானக் கலையைப் பொருந்துதலால் குற்றமற்ற மூர்த்தி யென் னும் பெயரை யுடைததாகி காணப்பட்ட வடிவையு முடைததாகி காலாக்கினிக்கொத்த பிரகாசத்தையு முடைத்தாகி இலிஙகவடிவாகி அதனுடைய ஊர்த்துவ பாகத்திலே ஒப்பற்ற ஒரு திருமுகம, குற்றமற்ற இச்சாஞானக்கிரியைகளாகிய திருநயனங்கள் மூன்றும் கண்டிப்பற் ற வடிவு முடைத்தாயிருப்பது மூர்த்திசாதாக்கியம். இதற்கு இலிங்க மூர்த்தியென்னும் பெயர். பிரதிட்டை யென்னும் பெயரையுடைய ஞானசத்தி கருத்தாவுக்கழகிய குணமென்னும் சுபாவமாதலாலும் அந்த ஞானசத்தியிலே தோற்றுகையாலும் கர்த்திருவென்னும் பெய ரையுடைத்தாய்ச் சுத்தமாகையால் துய்யப்படிகப் பிரகாசமான திவ் விய லிங்கமுமாய் அதனுச்சியிலே நாலுதிருமுகமும் நன்மை மிகுந்த

---

‡ லிங்க என்னுந்தாது சித்திரித்தல் என்னும் பொருட்டாதலால் பிறத்தல், காத்தல், முதலியவற்றால் உலகத்தைச்சித்திரிப்ப தாகிய பரமேசுரப்பிரபாவமே லிங்கமெனப்படும்* எனினுமமையும்.

பன்னிரண்டு திருநயனங்களுமுடைத்தாய் வலத்திலே சூலம், மழு வாள், அபயம், இடத்திலே பாமபு விளங்கிய பாசம் உணடாக்கப்பட்ட மணிவரதம என்னும் ஆயுதங்களைத் தரித்துக் குறைவில்லாத இலககணங்கள் கூடி யிருப்பது காத்திருசாதாக்கியம். இதற்கு ஞானலிங்கம என்றுபெயா நிவிர்த்தியென்னும் பெயரையுடைய தொழிலாகையாலும பழமையாய் இந்தச்சத்தியிலே தோற்றுகையாலும ஜெநிலென்னும் காரணப்பெயரை யுடைத்தாய் நாதமயமென்று சொலலப்பட்ட ஞானலிங்கமும் பேதமில்லாத விந்துமயமான கிரியாபீடமும ஒருமற் குறையாமற் கூடிப் பஞ்சகிருத்யமென்னும தொழிலையுடையது கன்மசாதாக்கியம. இது கிரியாலிங்கம் என்றும், அதிகாரத்தானமென்றும் சொல்லப்படுமெனபதாம் இனி ஞானக்கிரியைகளென்னும் நாதவிந்துக்களுடைய கூட்டத்திற பொருந்தும் தொழிலை விளங்கச்சொலலுமிடதது. (கஉ)

கர்த்திரு சாதாக் கியமுத ஞானும், வைத்திடு நாத மயமெனத் திருமே, நிவிர்த்தி முதலாய் நிகழ்கலை சத்திகள் வியப்புறு நாலு விந்து மயமே, யின்ன பீட லிங்க மிரண்டற, வருகலை கூடிய வவதரந தன்னின், முன்னுரை நிவிர்த்தி முதலாற் கலையென, மன்னிய விந்து மயமாம பீடங், தன்னி னடுவே தகுமிந திகைமுத, லமண்டரு நாத கலைகளோ ரைந்துங், திரண்ட வவைதாங் தீதறு நாத, மின்ன நாத மயமெனு மிலிங்கந், தன்னி னடுவே சதாசிவ னீசன், பிரம னீசுரன் பேரீ சானெ, னென்னு மைம்மூர்த் திகளிடந் தனிலுயர், சிவசா தாக்கிய முதலைந் தாசற, மிச்சிர மித்திடு மவதாரத் தீசா, னுதிகள்மு கபந் தியதா மவிர்சா, தாக்கிய மைந்துந் திரண்டவவதுரவு, கன்மசா தாக் கியரா குமமே,

எ-து. கர்த்திருசாதாக்கியம, மூர்த்திசாதாக்கிய அமூர்த்தி சாதாக்கியம் சிவசாதாக்கியம் இவை நாலும் நாதத்தில் தொழிலறுதி கன்மசாதாக்கியம் தொழில் நிவிர்த்தி, பிரதிட்டை, விதத்தை, சாந்தியென்னும் சத்திகள் நாலும் விந்துவிற்றொழில் சாந்தியாதீதை தொழிலறுதியென்று சொல்லப்படும். சொல்லிய தொழிலான நிவிர்த்தியாதி பீடமும் தொழிலறுதியான கர்த்திருமுதலான லிங்கமும், கன்மசாதாக்கியமானலிங்கமும் சாந்தியாதீதையானபீடமும் தம்மில் ஒத்தவிடத்திலே முன்சொன்ன ஆதிமுதல் நாலு சத்திகளும் பிரேரிக்கப்பட்ட வயிந்தவமான சாந்தியாதி நாலும் தந்தொழிலை உள்ளடக்கித் திரண்டிருக்கும் குடிலையென்னும் பீடத்தின்மேல் தகைமைப்பாட்டால் வியாபினிமுதலான சத்திகளால் பிரேரிக்கப்பட்ட இந்திகை ஆதியாய்க்காவலான நாதகலைகள் ஐந்தும் பொருந்தின இடமத்தீதற்ற நாதமான லிங்கம இந்த நாதமயமான லிங்கத்தின்மேல் நடுமேற்கு வடக்குத் தெற்குக் கிழக்கென்னுந் திசைகளிலே இருக்கும் சதாசிவன் ஈசன் பிரமன் ஈசுரன் மேலாகிய ஈசானன் என்னும் ஐந்து மூர்த்திகளிடத்திலே மேன்மையான சாதாக்கிய முதலான ஐந்தும் அலைவறப்பொருந்தி யிருந்துள அவசரத்தில் ஈசானுதியன முகவொழுங்காக விளங்கியிருக்கும். சாதாக்கியமைந்தும் ஒன்றாய்த்திரண்ட அவசரம் கன்மசாதாக்கியமென்பதாம். (௧௫)

சிவசா தாக்கியஞ் சிவனறனை யாசரித், தநுமுத லொன்
றை யொன்று சரித்தலி, லணிசா தாக்கிய மைந்துந் திர
ண்டது, தணிவில் கரும சாதாக் கியமே, யீனமில் பொ
ருள்க ளெவைக்கு மாதரந், தானேகரும சாதாக் கியமே.

எ-து. சிவசாதாக்கியம் பரமசிவத்தையும் அமூர்த்திசாதாக்கியம் சிவசாதாக்கியத்தையும் மூர்த்திசாதாக்கியம் அமூர்த்திசாதாக்கி

யத்தையும் சததிருசாதாக்கியம் மூர்த்திசாதாக்கியத்தையும் கன்மசாதாக்கியம் கத்திருசாதாக்கியத்தையும் ஆசரித்திருப்பதால் அழுகிய சாதாக்கியம ஐந்துங்கெடாமல் திரண்டது கனமசாதாக்கியம அழியாத எல்லாப்பொருள்களுக்குந் தான் ஆதாரமாய் அழியும்பொருளை அதிட்டிப்பித்தலால் கனமசாதாக்கியம என்பதாம். இந்தக் கனமசாதாக்கியம் திரண்ட திரட்சியைச்சொலலில். (கச)

சாற்றிய கரும சாதக கியநதான், மூர்த்தி வடிவாய மூனறு தத்தி ஞலும், பிண்ட மென்று பெயர்பெறு கின்ற வண்ட சராசர வியாபகத் தாலும், பிண்ட மெனபது பீட பெயரா, யெண்டகு வாதன மீதிருக கையினு, லதுசிவ திருவடி வாகையி ஞலுந், திண்டிற லருவுருத திரண்டமை யாலும, பிண்டா காய வெனப் பெயா பெறுமே.

எ-று. சொல்லப்பட்ட கன்மசாதாக்கியம் பஞ்சபூதங்களுடைய ஒன்றுதலினுல் உண்டாகையாலும் அண்டத்திலே பிண்டமென்று சொல்லப்பட்டு நின்றுசஞ்சரித்துமுள்ள ஆன்மவருக்கங்கட்கு உயிராய் நிற்கையாலும் பிண்டிகையென்னும பெயரையுடைய பீடத்துன்மேலேசொல்லுந்தகைமைப்பாட்டிலேஎழுந்தருளிஇருக்கையினுலும் பிண்டமான சத்திதானே திருமேனியாகையாலும் திண்ணிமையுடைய நிட்களமும் வீரப்பாட்டையுடைய சகளமும் கூடித்திரண்டு ஒன்றுனதாகையாலும் பிண்டமென்னும் பெயரையுடைய திருமேனியா யிருக்குமென்பதாம். (கரு)

சுத்த ...னைத் தததுவத் தொகையுஞ், சுதத காரியத் தத்துவ மனைததுஞ், செலறு கன்ம சாதாக கியததினை யென்று மாசரித திருபபது துணிவே.

எ-து. காரணமாய்ச் சுத்தமாயுள்ள தத்துவத்தின் கூட்டமும் காரியமாய் அசுத்தமாயுள்ள தத்துவத்தின் திரட்சியும் சூழப்பட்டுத் தங்கள் தொழிலுக்கு அதீதமான கன்மசாதாக்கியத்தை இடைவிடாமல்சந்தேகமறஆசரித்திருக்குமென்பதாம். (கசு)

தந்துரை சுத்தத தத்துவ மியபபின்.

எ-து. உரைதரப்பட்ட சுத்த தத்துவத்தின் பொருளாகிய அபரவிந்து அபரநாதம் பரவிந்து பரநாதம் இவைநான்கினு மிருந்து சுத்த பஞ்சகிருத்தியத்தைப் பண்ணும சதாசிவத்தினுடைய வியாததி வியாப்பியங்களைச் சொல்லில். (கஎ)

முந்துரை நிவிர்த்தி முதலிய வபர, விநது கலையென விளம்பிய வைநதே.

எ-து. உரைமுந்தின நிவிர்த்தி முதலாகச் சொல்லப்பட்ட கலையைந்தும் அபரவிந்துவிகற்பமானபஞ்சகலைகளென்பதாம் (கஅ)

இந்திகை தீபிகை ரோசிகை மோசிகை, கருதிய வூாத துவ காமினி யென்னு, மபர நாத கலையின வையநதே.

எ-து. இந்திகை தீபிகை ரோசிகை மோசிகை கிருத்தியத்தைக் கருதிய வூர்த்துவகாமினி யென்னு மைந்தும் அபரநாதத்தின்கலைகளென்பதாம். (ககூ)

சுழுமுனை பிங்கலை சொல்லிடை யுலகம், முழுதுங் காட்டிய நாடிகள் மூன்றே.

எ-து. பிரபஞ்சத்தைக் கெடாமல் அதிட்டித்து நிற்கும் இச்சா ஞானக்கிரியையென்று சொல்லப்பட்ட சுழுமுனை பிங்கலை இடை இவைமூன்றும் நாடியாய் நின்று நாதமுதல் பிருதவி யளவு முள்ள அடுக்குகளாக குலையாமல் பந்தித்து நிற்குமென்பதாம். (உ0)

சூக்குமை நல்ல சூக்குமை மிர்தை, மிகமகா ளமிர்தை
வியாபினி யேபர, மாகிய விந்து கலையிவை யைந்தே.

எ-து. சூக்குமை ஆதிசூக்குமை மிருதை அமிருதை வியா
பினி ஐந்தும் பரவிந்து பேதமாய் அபரவிந்துவை யதிட்டித்து நிற
குங்கலைகளென்பதாம. (உக)

காரண வியாபினி வியோம ரூபை, யனந்தை யனதை
யனுசிருதை தான்பரங், கலந்தநாத கலையிவை யைந்தே.

எ-து. அழியாத வியாபினி வியோமரூபை அனந்தை அனு
தை அனுசிருதை ஆகிய இவைகள் ஐந்தும் பரநாதபேதமாய் அபர
நாதத்தை நடத்துங்கலைகள் இந்தப்பரவிந்துப் பரநாதமும் சத்திசிவா
ன்மியமாயிருந்து அபரவிந்து அபரநாதத்தை நடததுமென்பதாம் ()

பரசிவம் நூற்றுப் பத்திலோர் பங்கா,மவதர மனுசிருத
ரவாநா மத்தினி,லமருஞ் சத்தி யனுசிருதை யாகு, மனு
சிருதர் பரம ரனுசிருதை பரையா, யனுசிருதர் கரண
மனுசிருதை யாகு, மனுதர் முதலா வனமவுரு நால்வரு,
மனுசிருதை முதலருட் சத்திக டம்மோ, டிணைந்து சே
வித் தீரிரு திசையிலு, மணைந்திருந் தேததுவ ரனுசிரு
தர்தமையே.

ஏ-து. பரசிவத்தில் ஆயிரத்தொருகூறு வலியையுடைய அவ
தரம் அனுசிருதா அவனைப்பிரியாத சத்தி அனுசிருதை இவர் பரை
யை அதிட்டிக்கையால் பரனென்றும் பெயர்பெற்றுத் தானொருவ
ரை ஆசரியாதபடியால் அனுசிருதராய்த் தமக்கவதாரமான பரை
யும் அனுசிருதையானது. இவரைக் கிழக்குத் தெற்கு வடக்குமேற்கு
என்னுந் திசையிலே அனுதர் அனந்தர் வியோமரூபர் வியாபகர் என்
னும் இவர்கள் நால்வரும் அனுதை அனந்தை வியோமரூபை வியா

.பினியென்னும் மனுக்கிரக சத்திகளோடே கூடி
தோத்திரம் பண்ணிக்கொண்டிருப்பார்களென்பதாம் (உங)

அனுதை யனுதர் கரணம தெனவும, வினவுடன் கிரியை
யெனவும் விளம்புவ, ரனந்தை யனந்தர் கரணமதாகு,
மினந்தருஞான சத்தியு மென்பர், வியோம ரூபை வி
யோம ரூபர்க், கியாவருங் கரண மென்ப ரிதன்றியுந்
தயாமிகு மிச்சா சத்தியுமாகும, வியாபினி தன்னை வி
யாபகர் காரண, மியாமகிழாதி திரோபவ மென்ப,
ரனுதைமுதலோ ரைவரை யதீதை, முனுவுண ராகக
லை யெனவுணர் முறையே.

எ-து. அனுதை யென்னுஞ் சத்தி அனுதருக்குக் * கரணமு
மாய்க் கிரியாசத்தியுமாமென்று சொல்லுவார்கள். அனந்தை யென
னுஞ் சத்தி அனந்தருக்குக் கரணமுமாய் அறிவைத்தரும் ஞானசத்
தியுமாமென்று விளம்புவார்கள் வியோமரூபையென்னுஞ் சத்திவி
யோம ரூபருக்குக் கரணமுமாய்க் கிருபை மிகுந்த இச்சாசத்தியுமா
மென்று உரைப்பார்கள். வியாபினியென்னுஞ் சத்தி வியாபகருக்
குக் கரணமுமாய்க் ஆன்ம வனுக்கிரகமான ஆதிசத்தியுமாம் என
றும் திரோதானசத்தியுமாமென்றும ஓதுவார்கள். அனுசிருதை முத
லான பஞ்சசத்திகளும் சாந்தியாதீதை முதலான கலைகளைப் பிரேரிக்
கையால் அனுசிருதை முதலான சத்திகள் ஐந்தையும் பஞ்சகலைகள்
என்று மொழிவார்களென்பதாம். (உச)

அனுசிருதர்தம்மோடனுதரனந்தர்,வியோமரூபர் வியாப
கர்சுத்த, மென்றுயரைந்தொழி லுற்றுநடத்தலிற், சகத்
திவர்காரிய மானசதாசிவர், வகுத்திடுமைந்து முசத்தொ
மென்னி, யசுத்த வைந்தொழி லவைபண் ணுவரே.

---

* கரணம்=காரணம்.

எ-து. அணுசிருதர் அனுதர் வியோமரூபர் வியாபகர் என்னும் இவர்கள் பரை கிரியை ஞானம் இச்சை ஆதி யென்னும் பஞ்சசத்திகளைக்கொண்டு சிவசாதாக்கியம் கன்மசாதாக்கியம் கத்திருசாதாக்கியம் மூர்த்திசாதாக்கியம் அமூர்த்திசாதாக்கியம் என்னும் இவர்களையுண்டாக்கி யொன்றுவிக்கும் தானசுத்த பஞ்சகிருத்தியத்தை நடத்துகையால் இந்த அணுசிருதருடைய அயதரகாரியமென்னும் கன்மசாதாக்கியருக்குச் சுத்த அசுத்த பஞ்சகிருத்தியத்தின் தொழில் தானே ஈசுரமுகமாதலால் இத்தொழிலாகிய முகத்துடனே கூடிப் பிரபஞ்சத்தில் அசுத்தபஞ்சகிருத்தியத்தை நடத்துவரென்பதாம்.()

* சமனை யுன்மனை தம்மி லிரண்டற, வமையு மவதார மணு
சிதா தாமே.

எ-து. சமனையென்னும் பரையும் உன்மனையென்னும் பரமும் தம்மில்கூடி ஆன்மாக்களைத் திருவுள்ளத்தடைத்த அவதாரம் அணுசிருதரென்பதாம். (உ௯)

இவ்வாகாரியமான சதாசிவர்க்கு இத்தன்மையான சத்திமனோன்மணி யொன்றுள்ளது.

அணுசிதர் முதலோ ரைவர் வியாத்தி, யளவை யுரைக்கி
னயனமா லுருத்திர, னேயு மகேசன் சதாசிவ னென்
றிவ, ராகி நிரைநிறை யையவரு மாகும்.

எ-து. அணுசிருதர்க்குப் பிரமனளவாகவும் அனுதர்க்கு விஷ்ணு அளவாகவும் அனந்தர்க்கு உருத்திரன் அளவாகவும் வியோமரூ

---

* அத்தியான் மிகமாகிய சமனை உன்மனை யிரண்டுஞ் சத்தியி னவதார கலைகளென வுரைக்கு மவசரமு முண்டு.

பர்க்கு மகேசுரன் அளவாகவும் வியாபகர்க்குச் சதாசிவன் அளவாக வும் வியாத்தியென்பதாம். (உஎ)

பீடு நீடு வியாபகர் பிறிவா, பாடகேச ரவர்பா தலமே
ந்நீடுற வதிட்டித் தினிதிருந் தனரே.

எ-து. பெருமை பொருந்திய வியாபகருடைய மூர்த்திபேத மான ஆடகேசுரர்சத்தபாதாளங்களைத்தமதாகக்கினையாலதிட்டத்தி அவ்வி டத்தில்இனிமையுடனே எழுந்தருளி யிருப்பரென்பதாம். (உஅ)

உய்த்த வியோம ரூபர் பிரிவா, மதத்தா கூர்மாண்ட ரவ
ர்தா, மெழுநாற் கோடி யிருடரு நரகமு, மழியா ததிட்
டித் தாங்கிருந் தனரே.

எ-து. மோட்சத்தைப் பிரசாதிக்கும் வியோமரூபருடைய மூர்த்திபேதமான கூர்மாண்டதேவ நாயனார் அந்தகாரமானஇருபத் தெட்டுகோடி நரகமும் கெடாமல் அதிட்டித்து அவ்விடத்தில் எழுந் தருளியிருப்பரென்பதாம். (உகூ)

ஆலு மறைநே ரனந்தா பிறிவாயு, கால வனலக் கடவு
ளுருத்திர, ஞால மென்று நவிலபிர மாண்டமு, சால
வளிகருந் தயாபதி யாகும்.

எ-து. ஒலிக்கும் வேதங்களால் விசாரிக்கப்பட்ட அனந்த ருடைய மூர்த்திபேதமான காலாக்கினி உருத்திரதேவர் பிருதுவியென் று சொல்லப்பட்ட பிரமாண்டத்தை மிகுந்த கிருபையுடனே கூடி அதிட்டித்து எழுந்தருளியிருப்பரென்பதாம். (௩0)

அறுதர் பிறிவா மாதாரங்களைத், தனுமிசை யண்டஞ்
சுமந்திருப் பதுவே.

எ-து' அணுதருடைய மூர்த்திபேதமான ஆதாரசத்தி நெருங்கிய அண்டங்களைத் தனது உச்சியினால் சுமந்து எழுந்தருளியிருக்குமென்பதாம். (௩க)

அணுசிதர் வடிவிற் பிறிந்திடு மனந்தா, குறிநதிடு மாதாரத்தொடு கூடி, யசுத்த மாயை யதிட்டிப்பவரே.

எ-து. அணுதருடைய மூர்த்திபேதமான அனந்தேசுரர் முன் சொன்ன ஆதாரசத்தியுடனே கூடி, அசுத்தமாயையைப் பிரேரித்துக் கொண்டிருப்பரென்பதாம். (௩௨)

இப்படிச் சுத்த தத்துவ மியாவும, வைடபுறு நாத மயலிங் கத்தினைத், தப்பற வாசரித் திருப்பது தானே.

எ-து. இப்படி வியாத்தி வியாபகங்களை யுடைய மேலாகிய தொழிலான சுத்த தத்துவங்கள் எல்லாம் நாதமயமாகிய நிலைபேறுகவுள்ள இலிங்கத்தை விடாமல் ஆசரித்திருக்குமெனபதாம். (௩௩)

அசுத்த தத்துவ வடைவினை யமல, ஞிசைத்திடு மைந்தொழி லியம்புவ மினியே, யந்த வணுசிதர் காரியமாகிய,
மூந்து சதாசிவ ரைந்தவ ராமா, யயனொடு மாலுட னந்த வுருத்திர, னியலு மகேச சதாசிவ ரென்றிவர், தம்மை யதிட்டித் திவாக டமைக்கொண், டப்முறை யசுத்த வைநதொழில் நடத்துவர்.

எ-து. நின்மலசிவன் அசுத்த தத்துவஙகளை நடத்தும் தான பஞ்சகிருத்தியங்களை மேற்சொல்லுமிடத்து முன்னே அணுசிதருடைய காரியமாகச் சொன்ன சதாசிவநாயனர் சிருட்டி திதி சங்காரம்

திரோபவம் அனுக்கிரகம் என்னும் ஐந்து தொழில்களை நடத்துமிட. த்து அவாசதகதியும் ஐந்தவதரமாகையால் இந்தச் சததியுடன கூடி நினறு பிரமன் விஷ்ணு உருத்திரன மகேசுரன் சதாசிவன் என்றி வர்களைக்கொண்டு முறையே அசுத்த பஞ்ச கிருத்தியங்களை நடதது வரென்பதாம். (௩௪)

திர வசுத்தத நைந்தொழிற் செய்புங, காரண வியாததி கமுறுவ மினியே.

எ-து. வேறு அசுதத பஞ்சகிருததியங்களைப் பண்ணுங கார ணேசுரர் வியாத்தியை மேற்சொல்லுவோமென்பதாம். (௩௫)

அவனி யதிட்டித் தறுநாற் றதது‌வ, மதனில வியாபித் திருபபவ னயனே.

எ-து. பிருதுவி புதத்தை அதிட்டித்துப் பிரமாண்டததிலிரு ந்து ஊாததுவ வியாத்தியாக ஆனமததததுவம் இருபத்துநாலிலும் வி யாபித்திருப்பவன் பிரமனெனபதாம். (௩௬)

அப்புவை யதிட்டித தாய பிரகிருதி, யொப்பி லுபாதா னத்தொடுங கூடிப, படிமுதல் மாயை முடிவு முபபடு தொன், றடைவுற வியாபிப பவனட லரியே.

எ-து. அப்புபுதத்தை அதிட்டிதது இணையில்லாத பிரகிருதி யென்னும் உபாதானததிலிருந்து பிருதுவிமுதல் பிரகிருதியளவாகச சுதந்தரமாக நடத்தி வித்தியாதத்துவம் ஏழும் ஆனமதத்துவததிலே காரியப் படுகையால்மாயை முடிவான ஏழிலும் வியாபித்துச்சொல் லிய முறையே முப்பத்தொரு தத்துவத்திலும சமவியாத்தியாக வியா பிததிருப்பவன் வெற்றிபாட்டையுடைய விஷ்ணு வென்பதாம்.

ஆயதீயை யதிட்டித் தளவறு, மாயை யுபாதா னத்தொடு
மன்னி மாயை முதலா மண்முடி வாக, * மூய தத்துவ
முபபத் தொன்றிலு மேய வியாபித் திடுமுருத் திரனே.

எ-து. தேயு பூதத்தை அதிட்டிதது அளவிடுதற்கரிய காரண மாயை யென்னும உபாதானத்திலிருந்து மாயைமுதல பிருதுவி முடிவான நெருங்கின முப்பததொரு தததுவததிலும் பொருந்த அதோ வியாத்தியாக வியாபித்திருப்பவன் உருததிரனென்பதாம். (கஅ)

வாயுவை மாயா வகையதிட் டித்துத், தூய வித்தை யு
பாதா னந்துட, னுய மாயை யாதிமண் ணளவாஞ், சே
ய தத்துவ மாணையிற் செலுத்திச், சுத்த வித்தை தொ
டாந்த மகேசம், மொய்தத சதாசிவ மூன்றுதத் துவத
திலு, மொத்து வியாபித் துறையு மகேசன்.

எ-து. வாயுபூதத்தை அழியாமல் அதிட்டிததுச் சுத்தவித்தை யென்னும் உபாதானததிலேயிருந்து மாயைமுதல் பிருதுவி முடிவா கவுள்ள தத்துவஙகளைத தமதாக்கினையாலே நடத்திச சுத்தவித்தை அதற்கடுத்த மகேசுரம் அதைநெருஙகின சதாசிவம் என்னும் மூன்று தததுவத்திலும் சமமாக ஊர்த்துவ வியாத்தியாக வியாபித்திருப்ப வன் மகேசனென்பதாம். (கக)

ஆகா யத்தை யதட்டித் தருளா, லோதை விந்து வுபா
தா னத்துடன், மாயை யடிமுடி மண்ணமர் தத்துவ, மே
ய வாணையி னுலே நடத்தி, சுத்த வித்தை யொடுநா

* மூய=மொய்த்த.

தாந்த, தத்துவ மைந்தினு மொத்து வியாபித், தாய்ந்த
சதாசிவ ஞேங்குவ னன்றே.

எ-து. ஆகாயத்தை யதிட்டித்து நேசமாகிய அனுக்கிரக நிமித்தமாக விந்து என்னும் உபாதானத்திலே யிருந்து மாயைமுதல் பிருதுவி முடிவாக அடைவே நிலைபெற்றுள்ள சுத்த தத்துவங்களைத் தமதாக்கினையினாலே பொருந்த நடத்திச் சுத்தவித்தை மகேசுரம் சாதாக்கியம்சத்தி சிவம் ஆன விந்து நாதமென்னும் ஐந்துதத்துவத்திலும் சுதந்தரமாக சம வியாத்தியாய் வியாபித்து மோட்சத்தை ஏதுவாக்கும் சதாசிவநாயனார் எழுந்தருளி யிருப்பரென்பதாம். (சo)

ஐந்து காரண ரைம்பூ தத்தினு, முந்த வியாபித் திருப்
பரிம் முறையே.

எ-து. காரணேசுரர் ஐவரும் முதன்மையாகிய பஞ்ச பூதத்திலே முறையே வியாபித்திருப்பார்களென்பதாம். (சக)

ஐங்கா ரணரையு மைந்து முகத்தினுந், தந்தன னெம்மி
றை தானதிட் டித்தே.

எ-து. எமது சுவாமியாகிய சிவன் காரணேசுரர்ஐவரையும் ஐந்தவதரமாகப்பிரேரிக்கு முறைமைமெப்படி என்னில் சத்தியோ சாதமுகத்தால் பிரமாவையும் வாமதேவமுகத்தால் விஷ்ணுவையும்அகோரமுகத்தால் உருத்திரனையும் தற்புருடமுகத்தால் மகேசுரனையும் ஈசானமுகத்தால் சதாசிவனையும் கன்மசாதாக்கிய ரென்னும் சதாசிவர் இம்முறையே அதிட்டித்தனரென்பதாம். (சஉ)

சத்திய முதலீ சானமொ டைந்தினு, மொத்தலௌ கிக
மோங்கிய வைதிக, மத்தியான் மிகமதி மாற்கமந் திர
மென், றுய்த்த ஞான மைமநதுமுறபவமே.

ம-து. சத்தியோசாதத்தில் லௌகிகஞானமும், வாமதேவத்தில் வைதிகஞானமும், அகோரத்தில் அத்தியான் மிகஞானமும், தற்புருடத்தில் அதிமார்கக ஞானமும், ஈசானததில் மந்திர ஞானமும் தோன்றுமென்பதாம.

*லௌகிகமாவது பரம்பரையான அறிவு. வைதிகமாவது வேதஞ்சொல்லப்பட்ட பசு புண்ணியமான போகாதிகளைக் கொடுக்கைக்குச் சாதனமான அறிவு. அத்தியான் மிகமாவது அகம் புறமென்னும் அறிவு, அதிமார்க்கமாவது பரசமயங்களுக் கப்பாற்பட்டு உட் சமயமாய்ச சித்தாந்த மல்லாத அறிவு மந்திரமாவது இரட்சிக்குந் தன்மையையுடைய மந்திரங்களைச் சாதித்து அனுக்கிரகங்களைப் பண்ணுமறிவு. மம=அறிகை, திரம்=இரட்சை. (சங)

அறைந்திடு ஞான மைந்தினு மயன்முத, னிறைந்தன
ரைவரு நிரைநிறை வகையே.

எ-து. சொல்லப்பட்ட ஞானமுதலாக ஐந்தினும் பிரமன் முதலானதேவர்கள் ஐவரும் முறையே நிறைந்து இருப்பார்களென்பதாம். இனிஇச்சாஞானக் கிரியைகளைச் சொல்லுகிறார். (சச)

பரசிவ னிசசை பாஙகில் சதாசிவம், மருவிய ஞான ம
கேசங் கிரியை, விரிதரு சுத்த விதத்தை யாகும்.

எ து. மேலாகியசிவன ஆன்ம வருக்கத்தைத் திருவுளத்தடைத்த இடத்தில் ஒப்பற்ற இச்சாஞானக் கண்டிப்பு ஒப்பற்ற சதாசிவம, பொருந்தியஞானம் மகேசம். ஆன்மாக்களுடைய பக்குவா பக்குவத்தை யறியுந் தன்மையாகப் பொருந்திய தொழில் சுத்த வித்தை யென்பதாம். (சரு)

---

* இவண் சொற்றஞானமைந்து மபரஞானத்து ளடங்கு ம.

கிளர் சிவ னிச்சையுமு ஞானமுங் கிரியையும், வளர்மலி
யுருத்திரன் மலரோன் மாலென், றிவர்தமை முறையே
யதிட்டித் தனவே.

எ-து. பரசிவனுடைய இச்சை உருத்திரனையும், ஞானம் பிரம
னையும், கிரியை விஷ்ணுவையும் அதிட்டிக்குமெனபதாம். (௬௬)

இனிஅம்மூர்த்திகளின் வியாத்தியைச்சொல்லுகிறார்.

அயனுயர் தத்துவ மனைத்தையு மதிட்டித், தியலும் பிர
கிரு திக்க ணிருந்து, வித்தை யேழினும் வியாபித் தனை
னே, வினவிய நெடுமால் வித்தை தத்துவந், தனையதிட்
டித்துச் சாதாக் கியமள, வினிது வியாபித் திருப்பவ
னுகு, முருத்திரர் தம்மை யுயர்ந்தோ னிச்சை, யதிட்
டிக்கையி னலவர்சிவதத்துவ, மொத்ததிட்டித்து வித
தை யுயிரெனுந், தத்துவ மிரண்டினும் வியா பித்தன
ரே.

எ-து. பிரமன்பிரகிருதியில பொருந்தியிருந்துகீழ்ஆன்மதத்து
வம் இருபத்துநான்கையும் அதிட்டித்து மேலவித்தியாதத்துவமெ
ழினும் வியாபித்தனன், சொலலும்விஷ்ணு புருடதத்துவத்திலிருந்து
ஆன்மதத்துவத்தைக்காரியப்படுத்தும் வித்தியாதத்துவத்தினும்ஆன்
மதத்துவத்தையதிட்டித்து மேலசாதாக்கியம் அளவாக இனிமையு
டன்வியாபித்திருந்தனன், உருத்திரரைப் பரசிவனுடைய இச்சை
யதிட்டிக்கையினாலும் அர்தவித்தயாதத்துவத்தைநடத்துகையினாலும
உருத்திரர் ஒக்கநின்று சிவதத்துவத்தை அதிட்டித்துச்சுதந்தரமாக
வித்தியாதத்துவத்திலும் ஆன்மதத்துவத்திலும் வியாபித்தனரென்
பதாம். (௬௭)

வனசனு மாலும் லௌகிகவைதிக , மெனுமிரு ஞான
மெய்தலி னிவர்க்குப், பசுநெறி ஞான மியல்பெனப் ப
டுமே.

எ-து. பிரமனுக்கு லௌகிகஞானமும், விஷ்ணுவுக்கு வைதிகஞானமும்சுபாவமாகையால இவர்கட்கு ஆன்மஞானமே இயல பெனபதாம். (சஅ)

பயிலுருத் திரனைப் பரசிவ னெனவு, மயனை மகேச
னெனவு மரிதனை, யியலுஞ் சதாசிவ னெனவு மாமிவ,
ரிருமூறு மாயை யிலய போக, பதிகா ரஞ்செயு மவரென
மொழிப.

எ-து. முன்சொன்ன உருத்திரனைப் பரசிவனுடைய இச்சை நடத்தலால் பரசிவனென்றும், ஞானமபிரமனை நடத்தலால மகேசனென்றும், கிரியை விஷ்ணுவைநடத்தலால் பஞ்சகிருத்தியமானதொழிலை நடத்தும் சதாசிவனென்றும் சொல்லப்படும் இவர்கள் போகத்தைப் புசிக்கும் தானமாகிய அசுத்தமாயையிலே இலயபோக அதிகாரங்களை நடத்துவாகளென்பதாம். (சகூ)

சிவம்பயில் சத்தி சேட்டித தலினிவர்க், கியம்பினம வி
யாத்தி வியாபக மிவையே.

எ-து. பிரம விஷ்ணு உருத்திரர்களைச் சிவசத்திசேட்டிக்கை யினால் இவர்கட்குவியாத்தி வியாபகங்கள் இயமபின மெனபதாம் ()

மீதா கியமறை விளம்பிய கன்ம, சாதாக் கியமெனுஞ் ச
தாசிவக் கடவுள், நிநதையி லுயிரனுக்கிரக நிமித்தமைந்

தொழிற் றிருவுளத் தடைந்த வவதார முந்து மகேச
மென மொழிந்ததுவே.

எ-று. மேலாகிய வேதம் சொல்லிய கன்மசாதாக்கியமென்னுமசதாசிவநாயனார் இச்சையுடன் ஆன்மஅனுக்கிரகநிமித்தமாகப் பஞ்சகிருத்தியத்தைத் திருவுளத்தடைந்து அனுக்கிரகிக்கும் அவதாரம் முன்சொன்ன மகேசுர மென்பதாம். (ருக)

ஈனமில் சதாசிவர் மகேசுர ரெனுமிவ, ரான வெளிகா
லதிட்டிப் பவரல, தூநெறி தருதத்துவங்களு மலவே.

எ-று. முன்சொல்லிய சிவம் சதாசிவர் மகேசுரர் என்னும் மூவரில் சிவம் நீங்கலாக குற்றமில்லாத சதாசிவர் மகேசுரர் என்னுமிவர்கள் ஆகாயபூதத்தையும் வாயுபூதத்தையும் அதிட்டிக்கும் காரணேசுரரும் அல்ல சுத்தமாகிய சதாசிவம் மகேசுரம் என்னுந்தத்துவங்களும் அல்ல வென்பதாம். (ருஉ)

தடுப்பரு மந்தச் சதாசிவ முதல்வர், கிடைத்திடு பஞ்ச
கிருத்தியந் திருவுளத, தடைந்து விருப்புறு மவதாரந் த
னிலே, யைவகைத் தொழிலா யமைவுறு சத்தி, மெய்வரு
சுத்த வித்தை யாகும்.

எ-று. முன்சொல்லியதடைபடாதசதாசிவநாயனார் தமக்குச் சுதந்தரமானக் கிருத்தியத்தை ஐவகையாகத் திருவுளத்தடைந்து நடத்தும் மகேசுரமான அவதாரத்தில் சத்தியுமதுவாக நின்று அந்தத் தொழிலைநடத்துகைக்குக்காரணமாக நின்ற அவதாரம் சுத்தவித்தை என்றுபெயரானதென்பதாம். (ருங)

இத்தகை வைத்திடு சுத்த வித்தை, தத்துவ மலசிவ சத்
தி யெனத் தகுமே.

எ-து. இத்தகைய சுத்தவித்தையைத் தத்துவமென்றுமல் சிவசத்தியென்று சொல்லப்படு மென்பதாம். (௫௪)

உற்றிடு மனுக்கிரா னுபாதானமதா, * மற்றதன்கருத்தாம
கேசுரராகும்.

எ-து. பொருந்திய அந்தச்சுத்தவித்தை சத்தியனுக்கிரகத்தை நடத்துகையாலும் இதனிடமாகஅனுக்கிரகம் பெறுகையாலும் அனுக்கிரகஉபாதானம பொருந்தியிருக்கும் இச்சத்திக்குச் சத்திமான்மகேசுரமென்பதாம். (௫௫)

விரிந்தவிச் சுத்த வித்தையுமகேசமுந், தெரிந்துணர் சத்
தி சிவான்மிக மாயிருந், திருநூற்றிருபத் தீரிருபுவனத்
தொருவா துறையு முயிரனுக்கிரக, மியற்றுதற் பொரு
ட்டா விந்த மகேச ரியற்படு மிச்சையி லேழுகோடி
போற்றுமந் திரர்களைத் தோற்றுவித் தனரே.

எ-து. விரிந்த சுத்தவித்தை மகேசுர மிரண்டுஞ் சத்திசிவான்மிகமாயிருந்து நடத்து மனுக்கிரகத்தொழிலை ஆராய்ந்து அறியில் இந்தமகேசுரரது இயல்பான ஞானுனுக்கிரகம் எனனுந் தொழிலாகியஇச்சையினுல் அபரமந்திரேசுரரால் ஆசரிக்கப்பட்ட சத்தகோடி மந்திரங்களைஅனுக்கிரகத்துஉண்டாக்கியவர்களைக்கொண்டு இருநூற்றிருபத்துநாலு புவனங்களிலும் மிகுந்த புண்ணியத்தால் அடைந்து ஒழியாமல் இருந்துள்ள ஆன்ம அனுக்கிரகத்தை நடத்துவார்களென்பதாம். (௫௬)

---

* மற்று - வினைமாற்று

ஆன்மார்க்கத்தில்இச்சையென்னும் பரசிவம் அதற்குகாரணமானபரைஅனுக்கிரக இச்சையைநடத்தும் மகேசுரம்அனுக்கிரகதொழிலாகும் சுத்தவித்தை காரண காரியமான வடிவறுதியும் வடிவும் ஒத்துப்பஞ்சகிருத்தியம் நடத்தும் சதாசிவம் என்னும் இவர்கள் அனுக்கிரகத்தொழிலைச்சொல்லில்.

மேவுமிச் சுத்த வித்தைநபகசுவ, வாவிகட் குயர்சிவ ஞானமளிக்கும்.

எ-து. பொருந்தியசுத்தவித்தை கன்மசாமியொப்பான ஆன்மாக்களுக்கு * நால்வகையான சத்திநிபாதமென்னும் தொழிலைடத்தி மேலான சிவஞானத்துக் கேதுவாகுமென்பதாம். (௫௭)

அளிக்கு மவதரந் தன்னில்மகேசர், வெளிப்படுநானு விதத்திரு மேனியோ, டளப்பருங்காட்சி கொடுத்தனுக் கட்குக், கிளப்பருந் திறலனுக் கிரகம் பண்ணுவர்.

எ-து. ஞானத்துக்கேதுவானஅவதரத்திலே ஆனமாக்கள்பக்குவத்துக்கீடாக மகேசுரர் பலவகைப்பட்ட திருமேனியுடனே வெளிப்பட்டுச் சொல்லுதற்களவிறந்தகாட்சியான திறத்தினால் மேலான பதமுத்திகளைக் கொடுத்து இரட்சிப்பரென்பதாம். (௫௮)

அழிவில் சதாசிவ ரைந்தொழில்வகையாற் பழுதி லனுக்கிரகம்பண்ணுவரே.

எ-து. நிலைபெற்றுள்ள சதாசிவர் போகநிவிர்த்தியைப் பண்ணிச் சிவஞானத்துக்கேதுவாகிய பதங்களில் வைத்து இரட்சித்துஅதிகாரநிவிர்த்தி பிறந்தபோது அந்தப்பதத்தைஅழித்து அந்தவழியின்

* நல்வகையாவன மந்ததரம மந்தம தீவிரம தீவிரதரம.

திகைப்பை மறைப்பாகி அசுதமறைப்பை அருளாகிய கிரணத்தா லீகெரிந்தம்மைக் கொடுக்குமதானபஞ்சகிருத்தியம என்னும் அனுக் கிரகத்தைப் பண்ணுவ ரெனபதாம். (ருக)

சொலலிய பரைாநற் சுத்தான்மாக்களுக் கெல்லையில திவ்
விய ஞானத்தாலே நல்லனுக கிரகம நயந்து பண்ணுவ
ரே.

எ-து. சொல்லப்பட்ட அருளாகும் பரை முனசொன்ன இயல்லை யுடைய சுததான்மாக்களுக்கு அளவிறந்த தெயவீகம் பொருந்தியஞானத்தால் சிவனுடைய பரிபூரணமுள்ளளவும் அறிந்து உபாசியைக் கொடுக்குந் தனமையாகிய அனுக்கிரகம்பணணு மென்பதாம

பண்ணிய வந்தப் பக்குவந் தன்னில், நண்ணிய ஞானக
கண்ணாறகண்ட, திவ்விய மான சிவானந் தத்தினை, யவ்
வாரினீவ ரனுசிதா தாமே.

எ-து. ஞான ஆதித்தியனை சிவனது அனுக்கிரகமான அருளால் விளங்கிய ஞானக்கண்ணால் உணமைமையைககண்ட அவதரத்திலவிளக்கிடமாகப் பதாாததத்தைக் கண்டவனுககு மேல்விளக்கு வேண்டாததுபோல் இவனை அருளுக்கு மேற்படுத்தி சிவானுபூதியாகிய சிவானந்தத்தைசசமுதிப்ல் அனுககிரகிபபா பரனுகிய அனுசிருதமொன்பதாம். (கூக)

இவர்கள் வடிவா கியதிரு மேனியைத், தவறகல் சுத்தவி
த்தியா தத்துவ மகேச தத்துவஞ் சதாசிவ தத்துவந், த
வாத விந்து நாதநத் துவமெனப, பகர்தருமறைகள் பகுத்
துரைத் தனரே.

எ-து. சுத்தவித்தை மகேசுரம் சதாசிவம் சத்தி சிவம் என்னு இவர்களுக்குத் திருமேனியும் புவனமும மூறையே குற்றமில்லாத சுத்த வித்தியாதத்துவம் மகேசுரதத்துவம சதாசிவதத்துவம கெ டாதவிந்துதத்துவம் நாததததுவம் என்று அரியவேதங்கள் பிரித்துச் சொல்லுமென்பதாம். (௩௨)

அதனல், தததுவ மூர்த்தி யிரண்டெனத் தகுமே.

எ-து. ஆதலினல் தத்துவம் என்றும் தத்துவததை அதிட்டி த்து இருக்கும் மூர்த்தியென்றும் இரண்டாமென்பதாம். (௩௩)

சுத்தமாயைதொடுத்துரைத்தனமினி, வைத்துண ரசுத்த
மாயை யிலக்கண, மொய்த்துரை செய்வ னுயாமறை
மூறையே.

எ-து. மேலாய வேதஞ்சொன்ன அடைவே சுததமாயையின் வியாத்தி வியாபகம் சொல்லி இதனல் உணர்த்தப்பட்ட அசுத்தமா யையின் இலக்கணம் சொல்லுவாமென்பதாம். (௩௪)

அதுதான் - நித்தியமாக நிறைந்தள விலதாயொத்துறுச
கத்துக் கொரு வித் தாகி, யென்று மழிவிலா தென்றன
ரன்றே

எ-து. அந்த அசுத்தமாயை அசேதனகாரணமாதலால் நித்தி யமாய் அசேதனத்தில் பூரணமாய், அனேகசத்திகளுடைத்தாய், ஒ ன்ருய், தனுகரணபுவனபோகங்களாய், சேகத்துக்கொப்பில்லாதஒரு விதையாய், சருவசங்காரகாலத்திலும் ஆன்மாவுக்குஇடங்கொடுசகு ம் தன்மையொழியாததாய் இருக்குமென்று சந்தேகமறச் சொல்லு மென்பதாம். (௩௫)

அந்த மாயையில் வந்தது கலையே.

எ-து. அனந்தேசுரரால கலக்கஞ்செய்யப்பட்ட மாயையிலேயாணவத்தைச் சிறிது நீக்கியபோது அக்கிரியையை நடத்துவது கலையாதலால மாயையிலே கலை தோன்றின தென்பதாம். (௬௬)

கலையி லுதித்தது கால மாகும்.

எ-து. மறைப்பை நீக்குந் தொழிலாதி கலைகளை காலத்தேயகையாலும் கலையிலே காலமுண்டென்று கலை காலம் நியதி மூன்றினொருழிலும் ஒரிடத்திலாகையால இவைமூன்றும் பிரியாமலுள்ளது. சொல்லுமிடத்து முற்பிற பாடில்லை யென்பதாம். (௬௭)

நியதியுங் கலைக்கு நிகழ்வ தரப்பெயர்.

எ-து. ஆணவம் நீங்கவே யநுக்கிரக மென்று நியமிக்கையாலும நியமித்தவிடத்துத் தொழில கலையாகையாலும் அந்தக்கலைக்கு நியதியென்று அவதரப்பெய ரென்பதாம். (௬௮)

நியதியிற் புருடதத்துவ சேரும்.

எ-து. பஞ்ச கஞ்சுகத்துடன் கூடிய போகத்தை நியமித்தவிடம் புருடதத்துவமாகையால் நியதியில் புருடதத்துவம் சேர்ந்ததென்பதாம். (௬௯)

பின்பு கலையிற் பிறந்தது வித்தை.

எ-து. கிரியாசத்தி யாணவத்தை நீக்க ஞானசத்தி போகத்தில் அறிவைப்பண்ணுகையால பின்பு கலையிலே வித்தை தோன்றுமென்பதாம். (௭௦)

அந்த வித்தை யறிந்தது ராகம்.

எ-து. போகத்தில் அறிவுந் தொழிலுமுண்டான விடத்துப் போகத்தில் இச்சை யறிவு இடமாக உணடாகையால்வித்தையில ராக முணடான தென்பதாம. (௭௧)

பின்றரும் வித்தை பிரகிரு தியையே.

எ-து. கலை காலம் நியதி வித்தை ராகம என்னுமைந்துங் கூடிய போகமேயறிவாகத் தனுகரணாதிகளொன்றியே யிருந்தவிடம பிரகிருதியாகையால பின்பு வித்தையிலே பிரகிருதி யுண்டாமென்பதாம.

பிரகிரு தியிலே பிறக்குமுக் குணமே.

எ-து. அறிவு தொழில் இச்சை ஒத்தவிடம்பிரகிருதியாகையாலும இதன்விகாரமே சாத்திக இராசததாமத மெனனும விகிர்தியாகையாலும் இதனிடமாகத் தனுகரணாதிகள உண்டாகையாலும் பிரகிருதியிலே முக்குணம் பிறக்கு மென்பதாம. (௭௩)

அப்பிர கிருதிக் கவதரநாமந், துப்பமா குணதத்துவ மெனச் சொலலுவா.

எ-து. பிரகிருதியின் விகிர்தியே குணமாகையால் அந்தப்பிரகிருதிக்கு அவதரப்பெயர் குணதத்துவ மென்று சொலலுவ ரெனபதாம். (௭௪)

ஆசறு முக்குண மாவன சாத்திக, ராசததாமத மென்றி யம் பினரே.

எ-து. குற்றமற்ற குணவிகாரமாவன சாத்துவிதம் இராசதம் தாமதம் என்று சொல்லுவ ரென்பதாம். (௭௫)

சாத்விக மொளியைத் தருமென மொழிப, ராசதமபர
விர்த்தியை யாக்குந, தாமத மநத காரந் தருமே.

எ-து. சாதுவிதம் பிரதானமான ஞானவேதுவாயிருக்கும் இராசதம் தொழிலாகிய போகவேதுவாயிருக்கும், தாமதம் போக மோட்சத்துக் கேதுவலலாததாகையால் அந்தகாரமாயிருக்கு மென்பதாம. (எசு

* சாதவித ராசத தாமத மயன்மா, லேதது முருததிர
ருக்கிவை முறையே,வாய்தத குணமென வகுத்துரைத் த
னரே.

எ-து. சிருட்டித தொழில விளககமான சாத்துவிதம் பிரமாவுக்கும, போகத்தொழில நிலையான இராசதகுணம விஷ்ணுவுக்கும், போகத்தொழிலற்ற விடம் நிராலம்ப மாகையால் அந்தகாரமான தாமதகுணம் குணவுருத்திரருக்கும் இயல்பான ஒவ்வொருகுணமெனப பெரியோர் வகுததுச் சொலலுவா என்பதாம. (எள)

இநதக் குணாநதனில் வந்தது புததி.

எ-து. குணமே புததிக்குத தாரகமாகையால் குணத்திலே புத்தி தோன்றியதென்பதாம். (எஅ)

புத்தியி லகங்கா ரம்புறப படுமே.

எ-து· அறிவு இடமாக ஆங்காரமுண்டாகையால் புத்தியிலே அகங்காரம் தோனறியதென்பதாம். (எகூ)

* இச்சூத்திரததில் சொற்ற குணங்கள் பகிரமுகபாவனையில்லுலமாகத் தொழிலின்மேல்வைத்துக் கூறிய அவதரமென அதிக விவரணஞ் சூதசங்கிதைமுதலியவற்றுளுண்டு ஆண்டைக்காண்க.

அதுபூ தாதிக மேவை காரிக, முதிர்தை சதமென மூவ
கை யாகும்.

எ-து. அந்த அகங்கார தத்துவம் பூதாதி யென்றும, உமைந்த வைகாரிக மென்றும், முதிர்ந்த தைசதமென்று மூவகை யெனப தாம். (அ௦)

தந்தபூ தா தியிற் சத்தத் துவமுதற், கந்தத் துவமெ
னவைந்துமுற் பவமே.

எ-து. பூதாதியென்றுரைத்தஆங்காரத்தில் சத்தபரிச ரூபரச கந்த மென்னும் ஐந்துதத்துவங்களும் தோன்றின வென்பதாம். (௧

சுத்த முதலிய தத்துவ மைந்தினு, மதத்கு வெளிமுத
லைம்புவி யளவாந், தத்துவ மைந்துந் தனித்தனி வ
ருமே.

எ-து. சுத்ததத்துவத்திலே யாகாசமும், பரிசத்திலே வாயுவும், ரூபத்திலே தேயுவும் ரசத்திலே அப்புவும், கந்தத்திலே பிருதுவியு மதோன்றுமென்பதாம. (அ௨)

வைகரி கந்தரும் வாக்கொடு கைகா, லுய்யாப் பாயுரு
வுபத்த தத்துவமே.

எ-து. வைகரியென்னும் ஆங்காரத்திலே வாக்கு பாதம் பாணி உய்த்தலில்லாத பாயுரு உபத்தமாகிய ஐந்து தத்துவமும் தோன்றுமென்பதாம். (அ௩)

தைசத வாங்காரந்தான் செவிமுத, லைந்துணர் மூக்களவைந்துதத் துவமும், மெய்துணர் மனதத் துவமும்
பொரமே.

எ-து தைசதமெனனும் ஆங்காரத்திலே சந்தேகமற அறியும் தொழிலையுடைய சோத்திரம், தொக்கு, சட்சு, சிங்ஙுவை, ஆக்ராணம் என்னுமைந்துதத்துவமும் பகுத்தறியும மனத்தத்துவமுந்தோனறு மென்பதாம். (௮௪)

ஆகிய தத்துவ மாறாறுயிர்களின, போகபூமி யெனப புகன் றனவே.

எ-து இப்படியுணடாக்கப்பட்ட தததுவ முப்பததொனறும் இவற்றை நடததுங் காரணததுவ மைநதுமஆகமுப்பத்தாறும்ஆன மாக்களுக்குச் சுத்தா சுத்தமாயுள்ள போகம்புசித்தற்கு இடமாதலாலே போகபூமியெனச் சொலலிய தெனபதாம. (௮௫)

நாங்கிய புத்தி தத்துவ மதனில், பாங்கினி லுதித்த * பாவமைமப பதுமே.

எ-து. போகததுக்குத தாரகமான புத்திதத்துவத்திலே அந்தப் போகததுக்கேற்கப் பாவத்தை யுணடாக்குங குண மைமபது முன்டாயின வெனபதாம். (௮௬)

காரணம் பதின்மூன் றொருபது காரியம, பாவுறுமிந்திய பந்தம பதினொன், றியலாங காரம் புத்தியெட் டெட்டே.

எ-து. காரணம் பதின்மூனறு, காரியம்பத்து, மேலறியுங்குணத்தை யுடைய இந்திரியபந்தம் பதினொனறு, சொல்லப்பட்டஆங்காரம் எட்டு, புத்திஎட்டு ஆகவைமபதும்பஞசாதசபாவமென்பதாம். ()

---

* புத்திததுவ மொன்பது குணததுககு மொவவொரு குணத்துக் கைமப தைமபதாக நானூற்றைம்பது பாவக மாகவுங் காரியப்படும்.

MAHAMAHOPADHYAYA

பன்னிய காரணம் பதின்மூன் றுவன, மன்னிய செவி முதல் வாக்கு முதலென, புளையுமீ ரைந்து புறக்கா ணங்களு, மனமொடு புத்தி வருமாங் கார, மெனமூன் றந் தக் காணமு மிவையே.

எ-து. பொருந்திய கரணம் பதின்மூன்றையும் சொல்லில் மன்னிய சோத்திரம் தொக்கு சட்சு, சிங்நுவை, ஆக்கிராணம், வாக்கு, பாதம், பாணி பாயுரு உபஸதம் என்னும்புறக்காணம் பத்தும், மனம் புத்தி, புத்தியில் தோன்றும் ஆங்காரம் என்னும் அந்தக்கரணம் மூன்றும் ஆககரணம் பதிமூன்றென்பதாம். (அஅ)

காரியம் பத்தே காசினி முதலைந், தேரியற் கந்த முத லொளி யீரைந், சீரிய தன்மாத் திரையிவை யைந்தே.

எ-து. பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பூதம் ஐந்தும், அழகிய கந்தம் ரசம் ரூபம் பரிசம சத்தம் என்னும் தன்மாத்திரை ஐந்தும் ஆகபத்தும் காரியமென்பதாம்.* (அசு)

இந்திய பந்தமு மீரைந் தொன்றவை, முந்திய செவி முதல் மொழிமுதல் மனமே.

எ-து- முன்சொல்லிய சோத்திராதி ஐந்து, வாக்காதி ஐந்து, மனம் ஒன்று ஆகபதினொன்றும் இந்தியபந்தமென்பதாம். (௯0)

கைதரு மெட்டாங் கார மியம்பிற், றைசத வைகாரிக பூ தாதியென், றெய்தாங் கார மிவையொரு மூன்றொடு, தமமே மோகந் தனிமக மோக, மமைவுறு தாமிச் சிர மே யதனொ, டந்ததாமிச் சிரமெனு மிந்த, வைந்தாங் கார பேதமு மவையே.

எ-து. போகவுபகாரமான ஆங்காரமெட்டையுஞ் சொல்லில் தைசதம் வைகாரிகம் பூதாதி யென்னும் ஆங்காரமூன்றும், போகம்பு சிக்கைக்கு மாறுபாடாயதமமென்னும் அந்தகாரம், மயக்கமாகியமோகம், அதில்மகத்தாகிய மயக்கமான மோகம், இருள்பொருந்திய அந்தகாரமென்னுந் தரமிச்சிரம், அதில்தெரியாமையென்னும அந்தரதரமிச்சிரம் எனவைந்தும் ஆஙகார மேல்ட்டான மறைப்பாகையால்ஆங்கார பேதமென்பதாம். (கச)

புத்தி யெட்டே புகழ்தரு மாதரு, மத்திற மிருநான் கென்றறைந் தனரே.

எ-து. புததிகுணம் எட்டையும்சொல்லில் தன்மம் ஞானம்வைராக்கியம் ஐஸ்வரியம்,என்னும் கூட்டமும், இதற்குமாறாகஉள்ள அதன்மம் அஞ்ஞானம் அவைராக்யம் அனைஸவரியம் என்னும் கூட்டமுமாகஎட்டும் புத்திகுணமென்பதாம். மேல்இவற்றின் பேதத்தையும்வியாத்தி வியாபகத்தையும் சொல்லுகிறார். (கஉ)

ஞானஞ் சாத்விக நலமிகு தருமமு, மானவை ராக்கிய
மதனோ டாக்கமு, மேனை யிராசத மதன்மா திகளொரு
நான்கையுந் தாமத மாக நவிற்றுவர்.

எ-து. இக்குணம்எட்டில் ஞானஞ் சாத்துவிதத்தைப் பொருந்திவரும், நன்மைமிகுந்த தருமமும் அதன் பின்னான வைராக்யமும் அதனோடு ஐஸ்வரியமும் பொல்லாத இராசதத்தைப் பொருந்திவரும் அதன்மம் அஞ்ஞானம் அவைராக்கியம் அனைஸ்வரியம் நாலும் தாமதத்தைப் பொருந்திவருமென்பதாம். (கஙு)

தன்மா திகளுரை தருபத் திருநான் கிம்மா ஞென்
பதொ டெட்ட தன் மாதிக ளீரைந் திருநான் கொன்பா
னெட்டெனக் கூறும் புத்தி குணமெழு பதுமே.

எ-து. * தன்மாதிகளுடைய பேதம் எழுபதையும் சொல்லில் தன்மம்பத்தாவன அயிம்சை சத்தியம் பிரமசரியம் கிருபை குருசேவை சுத்தம் பிரியம் கொல்லாமை களளாமை பொய்யாமை; ஞானம் எட்டாவன தாரம் சுதாரம் தாரணம சுதாரையந்தம பிரமோகமபிரமுத்தி ரம்மியம் சதாபிரமுத்திதம்; வைராக்கியம் ருனபதாவன அம்பை சலிலே மோகம் திருடாமை சுதாரை சுபாரை சுனேத்திரைசுமாரை உத்தமாம்பத்திகை; ஐஸ்வரியமெட்டாவன அணிமாமகிமா லகிமா கிரிமா பிராத்தி பிராகாமியம் ஈசத்துவம் வசித்துவம்; அதன்மம்பத்தாவன இம்சை அசத்தியம் அப்பிரமசரியம் கிருபையீனம குருவிகழ்ச்சி அசுத்தம் பிரியமினமை கொலே களவு பொய்; அஞ்ஞானமெட்டாவன அதாரம் அசுதாரம் அதாரணம அதாரையந்தம அப்பிரமோகம் அப்பிரமுத்திதம் அரம்மியம்அசதாபிரமுத்திகம; அவைராக்கியமொன்பதாவன அனம்பை அசலிலே அமோகம் அதிருடாமை அசுதாரை அசுபாரை அசுனேத்திரை அசுமாரை அனுதாம்பத்திகை; அனேஸ்வரியமெட்டாவன அஅணிமா அமகிமா அலகிமா அகிரிமா அப்பிராத்தி அபிரகாமியம் அனீசத்துவம் அவசித்துவம் இவ்வாறு விகற்பமான அழகிய புத்தியின்குணம் எழுபதென்பதாம. (௧௪)

ஆக்க மில்குணம் பைசா சத்துக, கவ்வயி ராக்கிய மிராக்
கதமியக்க, மஞ்ஞான மதன்மங் காந்தவந்தன்ம, மைந்
திரஞானஞ் சௌமியம் வய்ராக, மியம்பிர சாபந் தியம்
பிரமந்தனக், காக்கமொன் ருகச் சுபாபமா யிருககினு,
மொழிபசா சமுத வியோனிக ளெட்டினு, மிவைவியா
பித்தி ருப்பது துணிவே.

* இவண் சொற்ற தன்மாதிமுதலிய, சில ஆகமங்களில் வேறுவிதமாகக் கூறினும் கருத்துவகையில் ஒன்றுபட்டமையறிக.

எ-து. பிசாசுகளுக்கு அனைஸ்வரியகுணம், இராக்கதர்களுக்கு அவைராக்கியகுணம், இயக்கருக்கு அஞ்ஞானகுணம், கந்தருவர்க்கு அதன்மகுணம், ஐந்திரரென்னும சாதிக்குத் தன்மகுணம, சௌமியர்க்கு ஞானகுணம், பிரசாபத்தியாக்கு வயிராக்கியகுணம், பிராமணர்க்கு ஐஸ்வரியகுணம, ஆக இவ்வெண்கணமான தெய்வயோனி பேதத்திற்கு ஒவ்வொருகுணம் சுபாவமாக விருந்தாலும் பிசாசமுதலான எட்டுயோனிகளிலு மொன்றிலொன்று கலந்து சந்தேகமற வியாபித்திருக்குமென்பதாம். (௯௫)

வய்ந்த பசாச மிராக்கத மியக்க, மியங்குங் காந்தவ
மைந்திரங் கவலையில, சௌமியம் பிரசா பத்தியம் பிர
மமென், றிவற்றுக் குரைகுண நிரைநிறை யோரெட்
டீரெட் டிருபா னென்கெண் ணன்கெண், ணைந்தெண்
ணறெண் ணேழெட் டெட்டாய், நண்ணும் புத்தி
நவில்குண பேத, மெண்ணு விருநூற் றெண்பதோ
டெட்டே.

எ-து. பொருந்திய பிசாசுகளுக்கு ஐஸ்வரியகுணம்-௮. இராக்கதருக்கு-௧௬. இயக்கருக்கு-௨௪. கந்தருவருக்கு-௩௨. ஐந்திரருக்கு-௪௦. சௌமியருக்கு-௪௮. பிரசாபத்தியருக்கு-௫௬. பிராமணருக்கு-௬௪. ஆக ௨௮௮. பிசாசுமுதல் எண்மருக்கும் வைராக்கியருணம் முறையே ௭-௧௪-௨௧-௨௮-௩௫-௪௨-௪௯-௫௬ ஆக ௨௫௨; ஞானகுணம்-௬-௧௨-௧௮-௨௪-௩௦-௩௬-௪௨-௪௮ ஆக ௨௧௬; தன்மகுணம் ௫-௧௦ ௧௫-௨௦-௨௫-௩௦-௩௫-௪௦ ஆக ௧௮௦ ; அதன்மகுணம் ௪-௮-௧௨-௧௬ ௨௦-௨௪-௨௮-௩௨ ஆக ௧௫௪ ; அஞ்ஞானகுணம் ௩-௬-௯-௧௨-௧௫ ௧௮-௨௧-௨௪ ஆக ௧௦௮; அவைராக்கியகுணம் ௨-௪-௬-௮-௧௦-௧௨-௧௪

௧௬ ஆக ௭௨; அனைஸ்வரியகுணம் ௧-௨-௩-௪-௫-௬-௭-௮ ஆக ௩௬; ஆகமொத்த குணபேதம் ௧௦௦௮-ம்- மேற்சொன்ன ௨௮௮-ல் அடங்கியிருத்தலால் ௨௮௮-யே பிரதானமாகச் சொன்னதென்பதாம். ()

சொன்னகுண பேதந் தோன்றிற் றொகையா, முன்னூ
ற் றைம்பத் தெட்டென மொழிப.

எ-து. தன்மாதிகுணம் ௭௦. ஐஸ்வரியபேதமாகச் சொல்லிய ௧௦௦௮-யும் அடைக்கிக்கொண்டிருக்கிற பேதம் ௨௮௮ ஆகக் குணத் தொகை ௩௫௮ என்பதாம். (௯௭)

ஆன முன்னூற் றைம்பத் தெண்குண மானிடர் வியா
பித் திருப்பது வழக்கே.

எ-து. இவ்வாறு முன்னூற் றைம்பத்தெட்டு குணமும் மனிதரிடத்திலே குறைவற வியாபித்திருக்குமென்பதாம். (௯௮)

வியன்மிகு முக்குண வியாத்தி விரிப்பி னயன்முத லிந்
திர னளவா மமர, ரையமில் சாத்வித குணமதிட் டிக்
கும்.

எ-து. வியப்புமிகுந்த முக்குணத்தின் வியாத்தியை விரியச் சொல்லில் பிரமன் முதல் இந்திரனீறாகவுள்ள தேவர்களை நிலைபெற்ற சாத்துவிதகுண மதிட்டிக்கு மென்பதாம். (௯௯)

யாழோ ரியக்க ரசுர ரிராக்கதர், யாது தானவர் பிசாசுக
ளிவர்களைக், கோதமர் தாமத குணமதிட் டிக்கும்.

எ-து. கந்தருவர் இயக்கர் அசுரர் இராக்கதர் பேதமான யாது தானவர் பேய்கள் · இவர்களைக் குற்றம் பொருந்தின தாமதகுண மதிட்டிக்குமென்பதாம். (௧௦௦)

இருநிலத் தியங்கு மிருடி கணங்களைத் திருமிகு மிராச
சஞ் சேட்டித் திடுமே.

எ-து. பூலோகத்தில் நித்தியத்தைப் பெற்றுள்ள இருடிகளை அழகுபொருந்திய இராசதகுண மதிட்டிக்கு மென்பதாம. (௧௦௧)

தாவர பேதஞ் சரிந்திடு பதங்கங், காலள வில்லன காலி
ல்லாதன, சால வதிட்டிப் பது தாமத குணம்.

எ-து. பேதப்பட்ட தாவரங்கள் பறவைகள் அனேக கால்களோ ரோவன கால்களின்றி ஊர்வன ஆகிய விவற்றை மிகுந்ததாமத குண மதிட்டிக்கு மென்பதாம். (௧௦௨)

அன்ன மனிதரை யதிட்டிக் குங்குண, மின்ன தெனப்
பிறி தியம்ப வொண்ணுமையி, னின்ன குணங்கட் கிருப்
பிடமாகிய, தன்மா தன்மந் தானே தணவா, தென்று
ளினுமதிட்டிக்கு மென் றதுவே.

எ-து. முக்குணங்களின விரிவுயாவுஞ் சுதந்தரமாகவுடைய மனிதர்களை அதிட்டிக்குங் குணம் இனனதெனப் பிரித்துச் சொல்லக்கூடாமையால் புத்திகுணத்துள் நற்குணம் நாலிற் பிரதானமான தன்மமென்னும் புண்ணியகுணமும், தீயகுணங்கள் நாலிற் பிரதானமான அதன்மமென்னும் பாவகுணமும் இவ்விரண்டினடியாக எல்லாக்குணமு முண்டாகையால் சத்திநிபாதமளவும் ஒழியாமல் நின்றதிட்டிக்கு மென்பதாம். (௧௦௩)

தன்மந் தனையது தவிரமூன் றதன்மந், தனையது தவிர
மூன்று சரிக்கும்.

எ-து. ஞானம் வைராக்கியம் ஐஸ்வரிய மென்னும் மூன்றுகுணமும் தன்மத்தையும், அஞ்ஞானம் அவைராக்கியம் அனைஸ்வரியம்

என்னும் மூன்று குணமும் அதன்மத்தையும் ஆசரிக்கும் ஆகையால் உலகத்தினிடத்துத்தன்மம் அதன்மமாகிய புண்ணியபாவமே அதிட்டிக்குமென்பதாம். (கoச)

அதன்ம விலக்கண மாவன வேது, வாத செற்ப மதமி
குவிதண்டை, விவாதம விஞ்சைய சஞ்செயந் தானே,
துதைந்திடு மசுத்த சூனிய வாதம, ஞானந் தெய்வந்
தருமநல் லருந்த, மீனமில் வீடிவ் வைந்து நிந்தனை
யே.

எ-து அதன்மமாகிய பாவம ஏறுவழி யெப்படி யெனில் பொருளல்லாதவற்றைப் பொருளென்று திட்டாந்த மெய்நூலாகச் சாதித்தல், வாதமாவது உண்மையுணர்தல் வேட்கையோன் *கதை, செற்பமாவது சாதனமிரண்டுள்ளதன்கண்வெல்லும் வேட்கையுடையான்கதை, விதண்டையாவது தன்கோட்பாட்டை நிலைபெறுத்தாதகதை. இம்மூன்றுவகையாலு மலைவுசெய்து அறுதியிடாமலிருத்தல் விவாதம், விஞ்சைய சஞ்சயமாவது உபதேசகர்த்தா லறிவின்றி வியவகாரத்தா லறியப்படாதமிருந்த சந்தேகம், துதைந்திடுஞ்சுத்த சூனியவாதமாவது அசேதன வறிவினால்கருத்தா வில்லையென்றுஞ் சமயத்தைச்சாதித்தல், ஞானந் தெய்வந் தருமநல்லருத்த மீனமில் வீடிவ்வைந்து நிந்தனையாவது லௌகிகம்வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்கம் மந்திரம் என்னு மைவகை ஞானத்தையும் நிந்தித்தல் சிவமூர்த்தி பேதங்களாவன தெய்வங்களை நிந்தித்தல் கொல்லாமை முதலிய தன்மத்தினை நிந்தித்தல் கேட்ட அர்த்தங்களை யிகழ்தல்

* "கதையாவது கூறுவார்பலரை யுடைத்தாய்ச் சங்கையுத்தரங்களைப் பயக்குந் தொடர்மொழியின் கோவைப்பாடு."

அழிவில்லாத மோட்சத்தை யல்லவென்றல், இவை முதலிய மாறுபாடென்பதாம். (௧௦௫)

இந்த வதன்ம மிசைந்தவர் நரகடைந் தந்நமி றன்ப
மனுபவிப பாரே.

எ-து. இத்தகைய ஐவகையான அதனமபாவங்களைச் செய்தவர்கள் அஞ்ஞானத்துடன் பொருந்தி நரகடைந்து அளவில்லாத யாதனாசரீரத்தோடுகூடிமிருந்த துக்கப்பற்றே அவைராக்கியமாகவும் சுகமின்மையே அனைஸ்வரியமாகவு மனுபவிப்பார்களென்பதாம். ()

தன்ம மெனனுங் குணத்திலுண் டானது, நல்ல லௌ
கிக ஞானந் தானே.

எ-து. தன்மமாகிய பசுபுண்ணியத்தினாலே நல்ல லௌகிக ஞானமுண்டா மென்பதாம். (௧௦௭)

கேடில் வைராக் கியகுணந் தந்தது, நாடிய பௌத்த
*ஞானந் தானே.

எ-து. ஆசையுடன்கூடி யிருப்பினும் ஆசையறுதலான நடிப்புக்கெடாத வைராக்கிய குணத்தால் புத்தர் அமணர் எனபவர் நாட்டப்பட்ட ஞானமுண்டா மென்பதாம். (௧௦௮)

ஞானவை ராக்கியந் தன்னில் நன்குண், டானது சாங்
கிய ஞானமென் றறைவர்.

---

* உலோகாயதன் முதலிய புறப்புறச்சமயிகள் கொள்கைகளும் ஓரோர்வகை ஞானமாமென்றும், அவை அபரஞானத்தி லடங்குமென்றும் திராவிட மகாபாடியமுநிவர் வகுத்தனர். அதுகொண்டு பௌத்தன் முதலியார் அறிவை ஞானமென்றனர்.

எ-து. சிறிது பசு ஞானமும் சிறிது பிரபஞ்ச வைராக்கியமு ங் கூடினவிடத்தில் நிரீச்சுர சாங்கிய ஞானமுண்டாமென்று சொல் லுவரென்பதாம். (கoக)

அருண்ஞா னமும்வை ராக்யமு மார்கமுந், தருமால் யோக ஞானந் தனேயே.

எ-து. நல்லறிவாகிய ஞானமும் வைராக்கியமும் அணிமாதி யஷ்டவைஸ்வரியமும் இம்மூன்றுங் கூடினவிடத்துக் கன்மயோக ஞானமுண்டா மென்பதாம். ஆல்=அசை. (கக0)

குவிதரு புத்தி குணங்களுக் கதீத, நவிலதி மார்க ஞா னந் தானே.

எ-து. எண்ணிறந்த புத்தி குணங்களுக்கு மதீதமானவழி அதி மார்கஞான மென்பதாம். (ககக)

உலக ஞானத் ததீதமென் றோங்கிய, நல்லதி மார்க ஞா ன முளரெனப், பன்னிய பாசு பதர்கா பாலரென், றின் னோர் சனன மிலரென மொழிப.

எ-து.. பசுஞானமென்னும் லௌகிக ஞானத்தினுக் கப்பாலா ய்ப் பெரிதாய சிவஞானமல்லாத அதிஞான மார்கமாகிய நல்லஞான முடையவர்களாகச் சொல்லப்பட்ட பாசுபதர் கபாலர் இவர்க ள பேத முத்தியில் சிவானுக்கிரகத்தால் மோட்சமடைந்து சனனம டையார்களெனச் சொல்லப்படுவரென்பதாம். (கக௨)

லௌகிக ஞான முளவே தாந்த, மாயா வாதந் தத்துவ வாதம், பாட்டம் பிரபா கரபஞ்ச ராத்திரஞ், சாங்கிய

ரேனை நியோகர் சுபாவ, வாதிகள் கன்ம வாதிகள் சொல்ல, வழாத சஞ்சய வாதிக ளமணர், பூத வாதிக ளுலக வாதிகள், பாதக முணர்சட பதார்த்த வாதிகள், நியாய வாதிக ளநேகவாதிக, ளென்னும் பெயரின ரென்றும் பிறப்பறு, திருவினை யாழி யிடை சுழன் றியங்கும்,புண்ணிய பாவந் தமமிலொத்திடுநா, ணொருசத்தி நிபாதம் பிறந்துழிச, சாருணபாசந் தனைவிட்டு நீங்குவர், நீங்கிய பொழுதினி னிகழ்வினைக், கடனின் றுங்களை யேறுவ ரதுநீங்கியபின், வீட்டை யெய்துவ ரவர்வீடு கூடு, மாசை கூடி யுயிர்க்கு மெசசிய, மறைகள் விளம்பிய வீட்டை நிச்சயஞ், செய்வது நியதி தத்துவ மாமே.

எ-து. சுவர்க்காதியின் பொருட்டாகவுள்ள லௌகிகஞானம் பலபேதப்பட்டிருக்கும் அவை வேதாந்தம் மாயாவாதம் தத்துவவாதம் பாட்டம் பிரபாகரம் பாஞ்சராத்திரம் சாங்கியவாதம் நியோகவாதம் சுபாவவாதம் கன்மவாதம் சந்தேகமே சொல்லும் சஞ்சயவாதம் சயினவாதம் பூதவாதம் உலகவாதம் பாதகமேயறிவாயுள்ள சடபதார்த்தவாதம் நியாயவாதம் அநேகவாதம் என்பன இச்சமயங்களையனுட்டித்துள்ளவர்கள் சனனமரணப்பற்றறுமல் புண்ணியபாவமென்னும் சக்கரத்தில் * பூட்டையும் நீரும்போலவும் † கறங்கோலைபோலவும்சுற்றித்திரிந்து புண்ணியபாவம் தம்மிலொத்தகாலத்துத் துலையொப்பான சத்திநிபாதம் பிறந்தபின்பு தங்களைச்சார்ந்துள்ள குணபேதமாகிய பாசங்களைவிட்டு நீங்குவர், நீங்கவே யிருவினையென்னுஞ் சமு

* பூட்டை = இறைகூடை † கறங்கோலை = காற்றாடி.

த்திரத்தினின்றும் கரையேறுவர் ஏறவே மோட்சவீடடைவர்· இவர்களுள் மோட்சவிட்சுகளுக்கு வேதங்கள் விருமபிக்கொண்டாடப்பட்ட மோட்சத்தை நியமிக்கும நியந்திரத்துவம் மனதளவாக வியாபித்து அப்பால்விட்டு நீங்குமென்பதாம் (ககங)

அந்த நிச்சயஞ் செயுமவ நாதநிற, பந்த மும்மல பா
வந் தனனை விழுமிய கால வேகந் தன்னுற் கழல வி
ழைபபது காலதத துவமே.

எ-து. மோட்சததை நியமிக்கு மவதரத்தில் செனனவேதுவான மும்மல பந்ததததைக் குற்றமற்ற தனது கடுமையால் நீக்குவதுகால தத்துவமென்பதாம். (ககச)

கால மிறந்தது வீடெனக் கருதுவர்.

எ-து. மோட்சததல் காலமிலலையென வறிகவென்பதாம்.

அப்படிக் காரிய வசுததததத் துவங்களுந், தூயபமர் கா
ரண சுத்ததத் துவங்களுந், தப்பமாக்குஞ் சாதாக்கியத்
தினை, யிப்படி யாசரித் திருக்குமென் றனரே·

எ-து. இதுகாறுங் கூறியப்பிரகாரம காரியமாகிய அசுத்த தத்துவங்களும் நன்மையான காரணமாகிய சுத்ததததுவஙகளும் கிருபைபொருந்திய சாதாக்கிய தத்துவத்தினை இந்தப்பிரகாரம ஆசரிததிருக்கு மென்றனரென்பதாம். (ககரு)

தன்னிகர் கன்ம சாதாக் கியவடி, வைம்மூர்த் திகளா
தலினும் பூதமு, மம்முறை யாசரிப் பதுவிதி யாமே.

எ-து. தனக்கு நிகரில்லாத கன்மசாதாக்கியருடைய திருமேனி பஞ்சமூர்த்தியின் திரட்சியாதலால் அந்தமுறையிலே சத்தியோ

சாதமந்திரங்களைப் பஞ்சபூதங்கள் ஆசரிக்கையாலும் அந்தக் கன்ம சாதாக்கியரைப் பஞ்சபூதங்களும் சந்தேகமற ஆசரித்திருக்கு மென்பதாம். (ககசா)

மூர்த்திகள் பேத முயங்கலி னைபமூர்த், திகளிட மாக
நின்ற வைந்தொழில, செம்மை விளங்க மகிழ்ந்து
செயுஞ்சிவ, ரூப மாகிய சுத்த குணைந்தான, முருகலரை
ந்து முகமா வதுவே.

எ-து. சதாசிவமூர்த்திகளைந்தும் ஐந்துபேதமாகிய திருமேனி யாயிருத்தலால் அந்த மூர்த்திகளிடமாக வெழுந்தருளியிருந்து பிர யத்துடன அழகுவிளங்கப பஞ்சகிருத்தியத்தைச்செயும் தான பரம சிவனுடைய சுத்தகுணமைந்தும் இந்தக் கன்மசாதாக்கியருக்கு மணம் பொருந்திய ஐந்து திருமுகமாக நின்றதென்பதாம. (ககஎ)

இத்தொழிற் சாதாக கியர்திரு மேனியிற், சுத்த மகே
சுரர்ந் தோற்ற மாகும.

எ-து. இந்தக் கன்மசாதாக்கிய ரவதரபேதம மகேசுரர்பேத மென்று சொன்னபடியாலும தூலமேயவர்க்குத திருமேனியாதலா லும் முன் சொல்லிய சுத்தமான மகேசுரர்க்கு இவர திருமேனியிலே தோற்றமென்பதாம. (ககஅ)

மொழியு மிவர்திரு முகத்திற் றோன்றிய, வழியில சி
வசித் தாந்தமு மதுவே தழுவிய யாகம சாத்திரங்க
ளுமே.

எ-து. முன்சொன்ன சதாசிவநாயனர் திருமுகத்திலே பாச மயங்களை நிராகரணம் பண்ணுவதாய் நிலைபெற்றுள்ள சித்தாந்தம்

பொருந்தின ஆகமங்கள் *ஈசானத்தில் எட்டும், சத்தியோசாதத்தில் ஐந்தும், வாமததில் ஐந்தும் அகோரத்தில் ஜந்தும், தற்புருடத்தில் ஐந்தும், ஆக இருபத்தெட்டும் இவற்றைப்பின்சென்ற சாத்திரங்களும் தோன்றுமென்பதாம் (௧௨0)

இவரே காரண மெவைக்கு மென்ப, தித்தொழிற் சாதா
க் கியலிங் கந்தே, நிதத சகள நிட்கள சிவனை, பத்த
ர் தியானம் பண்ணுவ ரண்றே.

எ-து. பிரம விஷ்ணு உருத்திரரை யதிட்டிக்கப்பட்ட பீடமும், அதற்குக் காரணமான மயேசுரரை யதிட்டிக்கப்பட்ட கல்லபத்திரமும் இப்படிப்பட்ட சிவாதனததின்மேல் எழுந்தருளியிருக்கப்பட்ட சிவமூர்ததியான சதாசிவமும் அதன் முடி முகம் மார்பு கடிதடம் பாதம் என்னும் அவயவங்களை யதிட்டிக்கும் சத்தி சத்திகாரியங்களாகிய வித்தியாதேகமும், அதற்குமூர்த்திமானாகிற சிவோபாதி ஐந்தும் தண்டபங்கி வத்திரபங்கியுமாய்நின்ற அவதாரத்தில் அபரநாதம் அபரவிந்துவையும் பரநாதம் பரவிந்துவையும் ஒத்து அதிட்டிக்கப்பட்ட சாதாக்கியமென்னும் சிவலிங்கப்பெருமானிடத்திலே யிப்படிநித்தமாய்ச் சகளநிட்களமான பரமசிவனை அடியார்கள் பத்தியுடன்தியானிப்பரென்பதாம். (௧௨௧)

---

* புரோற்கீதமுதல் வாதுளம்வரையில ஈசானத்திலும், காமிகமுதல் அஜிதம்வரையில் சத்தியோசாதத்திலும், தீப்தமுதல் சுப்ரபேதம்வரையில் வாமத்திலும, விஜயமுதல்வீராகமம்வரையில்அகோரத்திலும், சௌரமுதல் முகபிம்பம்வரையில் தற்புருடத்திலும் பிறந்தனவெனக்காரணாகமங்கூறும். அன்றியும் இருபத்தெட்டாகமங்களும் ஈசானத்தில் உதித்தனவெனச் சிலவாகமங்கள் பேசும், என்னை? ஐந்துமுகங்கட்குந்தனித்தனி ஐந்துமுகங்களுண்டென்னு நியமங்கொண்டு ஈசானமுகசம்பந்தங்களான சத்தியோசாதாதி முகங்களினுண்டாயின வென்னுங் கருத்து கொண்டேயாகலின்.

தனுவொடு கூடுதல் சகளந் தனுவுட, னணைதலில்லாத
து நிட்கள மாமே.

எ-து. ஈசானி பூரணி ஆர்த்தி வாமை மூர்த்தியென்னும் பெயரினர் அணுசாதசிவரில் ஈசானர் தற்புருடர் அகோரர் வாமதேவர் சத்தியோசாதர் என்னுமிவர்களை வைந்தவமே தனுவாக அதிட்டிக்கையால் தனுவென்னும் பெயர்பெற்று உபாதியினும் உபாதிகுணியத்தினும் சத்திசிவனை விட்டுப் பிரியாதாகையால் சத்தியுபாதியுடன் கூடினதுசகளம. சாவசங்காரகாலத்தில் வைந்தவகாரியங்கள் மகாமாயையிலே யொடுங்குகையால் சத்தியுந் தொழிலற்றுத் தொழிலசெயும் காரணத்துடனே கூடிநின்றநிலை நிட்களமென்பதாம்.

இருடீர் முப்பத் தெண்கலை மயமா, முருவடி வறுசிவ
னுக்குண் டாகையிற், சிறகரு ணைம்முகத் தவன்திரு
[illegible]ரம, நிறக்குஞ் சகள நிட்கள மெனவே.

எ-து. அந்தகாரத்தைக் கெடுக்குஞ் சத்தியின் காரியங்கள் ஈசானிஐந்து திருமுடிகளாகவும், பூர்ணிநாலுதிருமுகங்களாகவும், ஆர்த்தியானது இருதயம் கண்டமதோள்கள் நாபி உதரம்முதுகு மார்புஎன்னுமெட்டு உறுப்புகளாகவும், வாமையானது பாயு கோசம்தொடைகள் முழந்தாள்கள் கணைக்கால்கள் புறவடிகள் கடிதடம் விரல்கள் என்னும் பதின்மூன்று உறுப்புகளாகவும், மூர்த்தியானது உள்ளங்கால்கள் உள்ளங்கைகள் நாசி திருமுடி வாகுகள் என்னும் எட்டுறுப்புகளாகவும், இவ்வாறு முப்பத்தெண் கலாசத்தி சொரூபமான உறுப்புகளையுடைய பராசத்து நிட்களசிவனுக்குச் சுதந்தரமாகையால்இந்த உறுப்புகளுடன் கூட்டிச்சிறந்த கன்மசாதாக்கியர் திருநாமம்சகளநிட்களமென்றுநிறமுண்டாகச் சொல்லப்படுமென்பதாம். (௧௨௧)

அந்தர தனுவென வாடியு நிழலென விந்நி
திற் சகளமெய் தியதே.

எ-து. நின்மலமாய் அரூபமான ஆகாயத்திலே நின்மலமாய் ரூபீகரித்து இந்திரதனுபோலவும பிரகாசமே வடிவாகிய கண்ணாடியிலே கட்புலன்களாற் காணப்பட்டுக் கடினமில்லாத பிரதிவிம்பம் போலவும் நிஷ்களத்தில் சகளம்பொருந்தின வென்பதாம. (௧௨௭)

தயாபரக் கரும சாதாக்கியரைந், தியான வுணர்வு தேர்
வு செப்பிற், படிக நிறமுடையர் பாற்சடை மகுடம், மைந்
து முடிமுக மைந்தி னைங்கர, மேகநேத்திர மிரண்டு ப
தாம்புயஞ் சூலமபரசு சுடர்வாள் வயிர, மேலு மபயம்
வலத்துறை யேந்திய, பணிபா சாங்குச மணியொடு வ
ரத, மிணைய விடத்து கரங்களி லேந்தி யெண்ணு மில
க்கண மியாவு நிறைந்து பண்ணுறு சகலா பரணமும் ம
ணிந்து *திப்பிய வறுவையுந் திப்பிய கந்தமுந், திப
பிய மாலையு மிவ்வகை புனைந்து, நீண்டகரங்களு நிம
ழொளி நகங்களு மூண்டெழு சற்றே முகிழ்ந்தபுன்
முறுவலுஞ் சாந்த ரூப மேய்ந்தினி தேவர்க்கு மாடுறு
கருணை யறம்பொரு ளின்ப வீடருள் புரிந்து வீற்றி
ருந் தனரே.

எ-து. கிருபையே வடிவான கன்மசாதாக்கியரைத் தியானத்தால்நின்று அடையு முறைமையைச் சொல்லுமிடத்துப் படிகம்

*பருப்பதம் காப்பியம் என்றற் றொடக்கத்தன வொப்பத் திவ்வியமென்னும் வடமொழி திப்பியமெனத் தமிழிற்றிரிந்தது.

போன்ற நிறமும் உயர்ந்து படர்ந்த சடாமகுடமும் ஐந்து திருமுடிகளும் ஐந்து திருமுகங்களும் பத்துகரங்களும ஏகதேகமும் இரண்டு பாதங்களும் வலதுகரத்தில் இச்சா ஞானக்கிரியையென்னு மதிகாரமான மூவிலைச் சூலமும் பராசத்திரூபமாய இலயத்தானமான மழுவும் பரமசிவனது கர்த்துருபவமாய்ச் சுத்தத்துவங்களையுண்டாக்குங் கட்டுவாங்கமும் விளங்குகின்றவாளும சுத்தமாயையைப் பிரேரிக்கும் அபேதகுணமான பீசபூரகமும் வச்சிரமும் போகத் தானமாகிய சாதாக்கியத்தை யடைந்தவர்களுக்குச் செனனபயத்தைப் போக்குவதான அபயமும் இடதுகரத்திலே திதிகுணமாகிய நாகமும் இந்திரியங்கள் பத்தும ஞானபூதமைந்தும் சூக்கும பூதமைந்தும் தன்மாத்திரையைந்தும் ஆக விருபத்தைந்தையுங் காட்டி நடத்துங் மாயாரூபமாகிய பாசமும் சங்கற்ப விகற்பமாகிய மனதத்துவத்தை நடத்துங் குணமாகிய நீலோற்பலமும் வியரணகுணமாகிய அங்குசமும் சுத்த அசுத்தத்துவாவைப் பிரவிர்த்திக்கும் குணமான தமருகமணியும், ஆன்மாக்கட்குக் கன்மத்துக் கீடாகப் போகத்தைக் கொடுக்கும் குணமானவரதமும் நாதகுணமாகிய மணியும் சங்காரகுணமான அக்கினியையும் பொருந்த தரித்துச் சாமுத்திரிகா லட்சணம் முப்பத்திரண்டினுளும நிரம்பிய பரமசிவனை யாதாரசேவையால் விளங்கும் குணமாய சதாசிவமாகிய சர்வாபரணத்தையுந் தரித்துத் திரோதாயியென்னும் பரிவட்டமும் அருளாகிய சுகந்தமும் பரையாகியமாலையும் இடைவிடாமல பொருந்தின நெடிய அத்தங்களும் பிரகாசத்தால் விளங்கிய நகமும் அனுக்கிரகாங்குரமான புன்முறுவலும் இவற்றையெல்லா முடையவனு யிருப்பினும் இவற்றிற் கப்பாற் பட்டுள்ளவனுயிருந்து சர்வான்மாக்களுக்கும் தன்மார்த்த காமமோட்சங்களைக் கிருபையினாலே யினிதாகவிளங்க அனுக்கிரகித்துச் சுகாதனமாக வெழுந்தருளி யிருந்தன ரென்பதாம். (கஉரு)

இந்தத் தியான வெழிற்றிரு.மேனியி, லைந்து சாதாக்
கியமடை யும்படி, யவர்ககமை கீழ்தென் வடமேற்
றிசைமிசை, நோக்கிய முகங்கள் நுவலருந் தொழிற்
சா தாக்கிய மைந்தென் றுரைக்கத் தகுமே, யம்முக
மைந்துஞ் சகளம தாம்பொழு தின்னண மீசா னாதி
யெனப்படும்.

எ-து. இவ்வாறு தியானததாலறியப்பட்ட வழகிய கன்மசா
தாக்கியர் திருமேனியிலே பஞ்ச சாதாக்கியமடைநத முறமையைச்
சொல்லுமிடத்துக் கிழக்கே நோக்கிய பூரவமுகம் சொல்லுதற்கரிய
கன்மசாதாக்கிய மென்றும் தெறகுநோககிய தட்சணமுகம் கர்த்
துரு சாதாக்கியமென்றும் வடக்குநோக்கிய உததிரமுகம் மூர்த்தி
சாதாக்கியமென்றும் மேற்குநோக்கிய பச்சிமமுகம் அமூர்த்தி சா
தாக்கியமென்றும் நாலுதிக்கிலும் வியாபித்த ஊர்த்தவமுகம் சிவசா
தாக்கியமென்றும் சொல்லப்படும். இவை சதாசிவாதி பஞ்சமூர்த்திக
ளுடனும் கூடிச் சகளமாக நிற்றலால் சகளநிட்களமான வந்தப் பிர
பாவத்தை யீசானாதியென்று சொல்லப்படுமெனபதாம்.      (கஉ௬)

தொழிற்படு சாதாக் கியத்தினைச் சொல்லி, னிழற்
பொலி சகள நிட்கள மாகையிற், றஞ்சமி லீசா னா
திக டாமே, பஞ்ச சாதாக் கியமெனப் படுமே.

எ-து. நாதவிந்து ரூபமாய்ச் சிவலிங்கமான கன்மசாதாக்கிய
த்தைச் சொல்லுமிடத்துப் பரமசிவனது அதிகாரத்தானமாகிய சதா
சிவஞ் சகள நிட்களமாகையால் பஞ்சகிருத்தியத்தை ஈசானாதி சத்
திகளைந்து மதிட்டித்து யாவற்றினுக்குஞ் தஞ்சமாய்நிற்கும் ஈசானாதி
குணங்கள்தானே பஞ்ச சதாக்கியமாய் நின்றன வென்பதாம்.    ()

முதலீ சான முகமூந ஞன்கினு, மிசமுற வியாபித்
திருக்கு மதுநான், பூசா காலம் புருடம்பார்த் திருந்
தே, யாசறு பூசாந் தத்தனில் முன்போல், மோசமில்
நாலு முகத்தினு முறுமே.

எ-து. மூந்தின ஈசானுதி முகமானவை சத்தியோசாதம் வாமம் அகோரம் தற்புருடம் என்னும் நான்கு முகஙகளிலும் வியாபித்திருந்தாலும் பூசாகாலத்தில் ஆவாகனம் பணணுகையால் ஈசானம் சத்தியோசாதததிலும் சத்தியோசாதம் வாமததிலும் வாமம் அகோரத்திலும் அகோரம் தற்புருடத்திலும் வியாபித்து குறைவற்ற பூசாந்ததசில் அருக்கியங்கொடுக்கையால் தற்புருடம அகோரத்தையும் அகோரம் வாமத்தையும் வாமம் சத்தியோ சாததையும் சததியோசாதம் ஈசானததையும் ஆசரிதது நிற்கையால ஈசானமுகம் குறறமற முன்புபோல நாலுமுகததிலும் முறறும் வியாபிததிருக்குமென்பதாம். (கஉஅ)

இவ்வண மிலக்கண மெய்து * சதேசசை, யவமறு சத்தி
சிவான்மிக யாகிய, விவ்விலிங் கந்தனிற் சிந்தித் தந்த
மில், தொழிலறு தொழிலி லொடுங்கு மேனுந், தோ
ன்மொழி முறைமை யினைமுகச் சாதாக், கியந்தொ
ழில் கிரியா பூசையுய்ப் பதுவே.

எ-து. கீழ்ச்சொன்ன இலக்கணங்களையுடையசதாசிவாயனுரைக்குற்றமில்லாத சத்திசிவங்களுடைய வுண்மையான சிவலிங்கத்தினிடத்திலே தியானித்துமுடிவற்ற கிரியாபூசைக்குக்கன்ம சா

* சதா + ஈசா = சதேசா = சதாசிவர்.

தாக்கியரே கருத்தாவாக வேதாகமங்கள் சொல்லுகையால் ஐந்து திருமுகங்களையுடைய கணமசாதாக்கியரைத் தற்புருட முகத்திலே கிரியாபூசை பண்ணுவதெனைபதாம். (௧௨-௧)

சாற்று சதாசிவர் தந்திரு மேனி, யேற்ற வித்தியாதே கமிவர்தா, மெல்லா மறியு மியல்பது நயன, நல்லோ ருணர வருஞான மந்திரைய, மீங்கிவர் பாக்கிய மெட்டுஞ் சிரமா, மோங்கள வின்மை யுயர்சிகை பூரண, மொள ளொளி கவசம் பெருமை யந்திரம்.

எ-து. இவ்வாறு சொல்லிய சதாசிவநாயனாருடைய திருமேனி ஆன்மாக்களுடைய கன்மத்துக்கீடாக வருந்தி ரட்சிக்குங் குணம் மந்திரமாகையால் மந்திர ரூபமான சத்தி வித்தியாதேகம், சாதாக்கியமென்னும் அதிகாரத்தையுடைய பரமசிவனது இச்சா ஞானக்கிரியைகளால் சர்வகாரியங்களையு மதிட்டித்து அறிந்து செய்யுந்தொழில்களாகின்ற குணத்தி னுரிமையான வியல்பு நேத்திரம், மூத்தான்மாக்களுக்கு உணர்த்தப்பட்ட அருட்சத்தி யிருதயம், பரமசிவனது இரணமான இச்சாஞானக்கிரியை மூன்றும் இவர்பஞ்சகிருத்தியம்* செய்யுங்குணமாகிய ஈசானாதி ஐந்துமாக எட்டுகுணமும் ஐஸ்வரியமாக உடைத்து ஆகையாலும் இவை சதா சிவத்திலுக்குத் தலைமையான குணமாகையாலும் சிரசு,(இங்குஇச்சை நிட்களம் ஞானமகேசுரம் கிரியை சதாசிவமூலமாய் இலயபோக அதிகாரமாகிய திருமேனிமூன்றும் தண்டபங்கியாய் நின்ற பஞ்சபூதமான கலைகளையதிட்டித்து நிற்குமீசனாதியைந்து ஆக எட்டும் பதிக்குஐஸ்வரியம்) அனாதியிலே தனக்குச்சுதந்தரமாயுள்ள சிவசரணம் மேலானசிகை, நிட்களத்தன்மையை மறைத்து நின்ற ஞானக்கிரியைகள் மிகுந்த

பிரகாசமானகவசம், ஆன்மாவினுடைய அனுதிமலத்தைச் சங்கரிக்கும்பெருமையை அஸ்திரமென்பதாம். (க௯0)

முந்து மறைநெறி முதலாவரண, மைந்து பிரமமோ
டாறங் கமுமே, வீசிய வுபயா வரண்மு மிச்சைக், கீச
ரனந்தா திகளெண் மருமே, மூன்று வதுகண முதல
வர்க ளெண்மரு, நான்கா வதுமக வான்முத லீந்திரு,
பாங்கா ருலக பாலரு மாரு, மைந்தா வதுதச வாயுத
மாமே.

எ-து அணுசதாசிவர் * பதினொருபேரும் சிவதத்துவத்தைப் பெற்றுப் பிரதம ஆவரணத்திலும் அநிற் பக்குவரான அனந்தராதி அட்டவித்தியேசுரர் இரண்டாமாவரணத்திலும் நந்திமுதலான அட்டகணேசுரர் மூன்றுமாவரணத்திலும் இந்திரன் முதலான தசலோகபாலகர் நான்காமாவரணத்திலும் தசாயுதங்கள் ஐந்தாமாவரணத்திலும் இருப்பரென மேலான வேதங்கள் சொல்லுமென்பதாம்.

இனிலிங்கபூசையில் ஆவரணங்களுடைய வியாத்தியைச் சொல்லுகின்றனர். (க௯க)

பஞ்சாவரணத் தலம்பக ரும்பொழு, தம்புய கேசரந்
தனி தளந்தம், பீட கண்டம் பிரகிட பீடந், தேடரும்
பிரமச் சிலையிவை யைந்தே.

எ-து. பஞ்சாவரணத்தலங்கள் சொல்லில் பதுமத்தில் கேசரமான கல்லபத்திரத்திலும் தேளாக்கிரமானவிகிருதவாரியிலும் ஞானரூபமான பீடகண்டத்திலும் கர்தபீசாங்குரமான கீடபீடத்திலும்

* அணுசதாசிவர் பத்தென்றே பல் சித்தாந்தம் பகரும்.

அளவிடப்படாத ஆதார சததியான ஆதாரசிலையிலும் முறையே கற்பாவரணம், வித்தியே சுராவரணம் கணேசராவரணம் லோகபாலராவரணம் அத்திராவரணம் வியாபித் திருக்குமென்பதாம். ()

அமல னிருந்தரு ளம்போ ருகத்தின், சமயில் கிழங்கு
தான்பிர மாண்டங், கருதிய புனன்முதற் கலைமுடி வா
ய, விருபத் தொன்பது தத்துவ நாளம், புறவிதழ் மா
யை ய விதழாவது, விரல்கெழு சுத்த வித்தை கேச
ரங், கன்னிகை யெண்ணென கலைகுண் டலியா, வித
தையைம் பத்தோ ரககர மதனிற, கருதிய கேசரங் க
ன்னிகை யதன்மேற், பரவிய வட்டம் பருதி மதிதீ,
மருவிய சத்தி யெனவிரி மண்டலம்.

எ-து. நின்மல சிவனுடைய அதிகாரத்தானமாகிய சதாசிவரெழுந்தருளி யிருக்கும் பதுமத்தினுடைய ஒப்பற்ற கிழங்கு பிரயாண்டமாகிய பிருதுவிதத்துவமாம. அப்புமுதல்கலையீருய்ச்சொலலைய இருபத்தொன்பது தத்துவமும் நாளமாம், அயரேசன் முதலாய புவனமெழுபத்திரண்டும் நாளத்தின் கண்டங்களாகிய முள்ளுகளாம், புத்திகுணமாகச் சொல்லப்பட்ட பஞ்சசற்பாவம் நாளததின் சூத்திரமான நூலாம், புறவிதழைச் சுமந்து நிற்கும் முடிச்சுப்படம் மாயா தத்துவமாம், உள்ளிதழ் சுத்தவித்தியா தத்துவமாம், வெற்றியினையுடைய சுத்தவித்தியா புவனகலாசத்திக ளறுபத்துநாலும் கேசரமாம் கன்னிகை, அறுபத்துநாலு கலையாதரமான குண்டலியாம், வித்தை ஐம்பத்தோரக்கரமாம், இதனில் வட்டம், மகேசரத்தில் வட்டம் கன்னிகையில் வட்டம் அதன்மேற்பரவிய வட்டம் நான்கும ஞானம் கிரியை இச்சை ஆதியென்னும் சத்திகளால் வியாபிக்கப்பட்ட சூரி

யமண்டலம் சோமமண்டலம் அக்கினி மண்டலம் பொருந்திய சத்திமண்டலம் எனவிரிந்த மண்டலமாகச் சொல்லப்படு மென்பதாம்

மேதினி யிலுயர் விந்தை வியாத்தி, யான சத்தி மண்
டல மளவாய்த் தீயன விலாத சிவாசன மாகுந் தடமலி
சாதாக் கியமுதற் சமனை, முடிவா கசசிவ மூர்த்திய
தாகுந் தனைமுத லுன்மனை யளவு நிலாவிய பரைசிவன்
பூரண மூல மெனப்படுமே.

எ-து. பிருதிவிமுதல மாயையீறன முப்பத்தொரு தத்துவங்களையும் அதிட்டிக்குஞ் சுத்த வித்தையினுடைய வியாத்தியான சத்தி மண்டலமென்னும் அபரவிந்து அபரநாதம் பரவிந்து பரநாதமாய் வாக்குக்குறறமில்லாத சிவாசனமாவது, தத்துவ முப்பத்தாறையும் இதற்குப் பாதாளமாகிய மகாமாயையென்னுங் குடிலையுமாதனமாம், சகள நிட்களமாய் நின்றனுக்கிரகத்தைப் பண்ணும் சதாசிவமாய நின்ற சுத்த தத்துவ மிருபத்தமூன்றும் இவற்றை யதிட்டிக்கும் சமனை உன்மனையும் பரமசிவனுக்குத் திருமேனியாம். சத்தியுபாகளைத திருமேனியென்றும் பிருதுவி முதல் பரையீறாக வியாபித்து நிற்கும் பரமசிவனுடைய தன்மையை மூலமென்பதாம். (௧௩௪)

இப்படித் தனைமுதற் சமனை யீறாய்ச், செப்பவி யாபித்
தும பரம சிவனது, பொருவி லுயர்பரி பூரணந் தன்னை
யறிவி லழுந்துத லாவாகனமே.

எ-து. இவ்வாறு மூலமந்திரத்தால் தரிசிக்கப்பட்ட மேலான குற்றமற்ற பரிபூரணத்தைச் சிவப்பிரசாதமாகிய வருளினாலறிந்து அறிவிலேயழுந்துவது ஆவாகனமென்பதாம்.

ஆவாகனமென்றும் அபிமுகீகரணமென்றுமிருவகைத்து பி ரதிட்டாகாலத்திலே சர்வசங்காரயளவாகச் சிவலிங்கத்தில் சானித் தியமாவதற்குப் பண்ணுஞ் சிவனியாசம் ஆவாகனம். தினந்தோறு ம்பூசாகாலத்தில் சிவலிங்கத்திலெழுந் - ருளியிருக்கும் சதாசிவனது நிட்களமாயநான்குமுகத்திலும் விபாபித்திருக்கிற ஈசானமுகந் தன் னைப்பார்க்குமபடிப்பண்ணுவது அபிமுகீகரணம். (கநரு)

அலையா தழுநந நிலைபெறல நாபனம்.

எ-து. மேற்சொன்ன அழுத்தம நிலைபெறுகப் பொருந்துவது தாபனமெனபதாம். (கநசு)

இவன்றன தறிவு சிவன்பூ ரணத்திலுரு, சிவன்பூ ரண
த்துவ மிவன்றன தறிவுனு, மொல்லையொன் றகலா
துறவுசெய் திருபய, தொன்றிய சந்நி தானமென் று
ரைப்பர்.

எ-து. பெத்தநிலையில், சிவனதறிவுக்கு மறிவாகிய பூரணமுள் ளளவும் இவனறியுந் தாசோகவறிவும், இவனது தாசோகமாகியவறி வுள்ளளவுஞ் சிவனதனுக்கிரகமும் இடைவிடாமலொன்றியன்னி யோன்னியமாகுந் தன்மையைச் சந்நிதானமென்பதாம். (கநஎ)

இவனிடந் தூறுமறி வென்று மொழியாச் சமையது
*தானே சந்நிரோ தனமே.

எ-து. கீழ்ச்சொன்ன தன்மையாகிற இரண்டுறுதலொழியாம லிருக்கிற அறிவே சந்நிரோதனமென்பதாம். (கநஅ)

*தானென்பது கட்டுரைச் சுவைபடநின்றது பிறண்டுங்காண்க.

*பாத்திய வாச மருக்கியம் பழுத்த, வான்மசுத்தி நிமித்தமாகவு, மறுமல மானை நல்வீட் டின்பங் குறுமுந வேது வாகவுங் கொடுத்து.

இ-து. கீழ்ச்சொன்னநிலையில் சிவனுடையபிரகாசமாகிய இச்சாஞானக்கிரியைகள் பொருந்தினதானமாகிய சீபாதத்தில் பொருந்துவதுபாத்தியம், சத்திகளுடைய விளக்கத்தாலே அருளென்னுந் தன்மையையுடைய திருமுகத்திலே பொருந்துவது ஆசமனம், திருமுகமென்னுமருளைக்காலுந் தன்மையாகிய திருமுடியிலே பொருந்துவது அருக்கியம, இவைச்சத்திகாரியமாதலால தனுகரணாதிவன போகமாகிய குற்றத்தைக் கழுனிருத்தையேஆன்மசுத்தி, சுத்தசைதன்னியபுட்பத்தை நிட்களசிவனாகியபரமசிவனிடத்தில் சாயுச்சிய வேதுவாகக்கொடுக்கமென்பதாம.

கிரியாபூசைபண்ணுமிடத்து‡மகேசுரமாகிய பாதத்திலும்சதாசிவமாகிய முகத்திலும் நிட்களமாகிற முடியிலுமபாத்திய ஆசமன அருக்கியங்களை ஆன்மசுத்தி நிமித்தமாகக் கொடுத்து நிட்களமானவானந்தம் பெருகைக்கு முடியிலே புட்பம் சாத்துவது. (க௩௯)

நிகழ்சல சுத்தி நிமித்த மாக, மகிழ்வுட னேதிருமஞ்சனம் பண்ணி.

எ-து. அருட்போதமே மலமாகையால் அந்தப் போதமாகிய மலத்தை நீக்கத்திருமஞ்சனமாட்டுவதென்பதாம் (க௪௦)

நீங்கருங் கரும சுத்தி நிமித்தமாக, நீங்கரு துத்துவத் திரயஞ் சாத்தி.

---

இச்சூத்திரமுதல்-க௫௦-வது சூத்திரம்வரையில குளகம்.

‡ இங்கு மகேசுரம்=சகளம், சதாசிவம=சகளநிட்களம், திருமுடி=நிட்களம்,

எ-து. போதங்கழலுமவதரத்தில் மனோவாக்குக் காயத்தால் வந்தகன்மவாதனையைக் கழுவுவது குற்றமற்றதத்துவத்திரயம்.

சஞ்சிதவாகாமியபிராரத்தவம் நீங்குவதேசுத்துவத்திரயம் ()

ஞான விளக்க நன்றுதற் பொருட்டுத், தூப தீபந் துறைநந்தினி தளித்து.

எ-து. வாதனையைக் கழற்றுவது கிரியாசத்தியாதலால் அந்தக் கிரியாசத்தி தூபமாம், ஞானசத்தியின் வாசமாய ஞான விளக்கமாயிருத்தல் தீபமாம், ஆகலின் அறியாமையைநீக்கி யறிவைக்கொடுக்கப்புகுவதே தூபதீபமென்பதாம். (கசஉ)

சட்குணந் தனக்குச் சார்ந்த பொருட்டுப், பொக்கமில் போகாங் கம்பூ சித்து.

எ-து. சர்வஞ்ஞத்துவம் பரிபூரணத்துவம் அனாதிபோதத்துவம் சுதந்தரத்துவம் அலுத்தசத்தியத்துவம் அனந்த சத்தித்துவம் என்னும் சிவகுணமாறும பெறுதல் மெய்யாகிய போகாங்க பூசையென்பதாம்.

சிவபோகத்துக்கங்கமாகிய சிவகுணங்களைப் பெறுதல் போகாங்கபூசை. (கசங)

பின்மன மமைவு பிறத்தற் பொருட்டு, நைவேத் திய முக வாசமு நல்கி.

எ-து. அனாதியிலே இருத்தியத்தையுடைய சிவனுக்குப் பராபரப்போதக் கழற்றியே இருத்தியாதலால் பராபரபோதமாகிய தற்போதத்தை நைவேத்தியமும முகவாசகமுமாகக் கொடுப்பதென்பதாம்.

பேதத்தன்மையி னிறைவே நைவேத்தியம நிறைவுகுன்றுமையே முகவாசம். (கசச)

மூவகைத் துக்க முடிகையின் பொருட்டுப் பாவக மா
னைபவித்திரஞ் சாத்தி.

எ-து. தைவிகம் பௌதிகம் ஆன்மிகம் என்னு மூவகையான வாதனையாகிய துக்கத்தை நீக்குவது பாவிக்கப்பட்ட பௌத்திர மென்பதாம.

மனோவாக்குக் காயமிறந்த விடத்தில் முன்னழியாம லதிட்டித்து நின்ற இச்சாஞானக் கிரியையினதுண்மையைப் பொருந்துவது பௌத்திரம்- (௧௪௫)

எல்லா நன்மையு மெய்துதற் பொருட்டு நல்ல செபந்
தை நயந்துநி வேதித்து.

எ-து சர்வ*குணங்களுங் கழன்று மோக்கம் பெறுதற்கு அகார உகார மகார விந்து நாததத்தின் கழற்றியே செபமாதலால் செபமாகிய வுரையை நீங்குவது செப நிவேதன மென்பதாம். (௧௪௬)

மூலமந்திரத்தை இலயாந்தமாக உச்சரித்து மேலான பஞ்சாக்கரத்தின் நிலையைக் கூடுவது செப நிவேதனம.

அயன்மா லிவர்கீ ழாகையின் பொருட்டுச் சயமான புற
வெதிர் தண்டம் பண்ணி.

எ-து. தற்போத மென்னுமதிகாரத்தை நடத்தும் பிரமவிட்டுணுக்களால் ஞானக்கிரியைகளை நீங்கி நாயகன் அடிமையாய் நிற்குந் தன்மைநமஸ்கார மென்பதாம்.

வணங்குகிறவர்கள் பிரமவிட்டுணுக்கள் ஆகையால் அவர்கள்

*மூவென்பது மூன்றென்னு மெண்ணுக்கு ஆதேசமாம்.

MAHAMAHOPADHYAYA
... IYER LIBRARY

தொழிலையும் அவர்களை யதிட்டிக்கும் சூக்குமமான ஞானக்கிரியைகள் அதிகாரத்தையும் நீங்குவது நமஸ்காரம். (௧௪௭)

அகண்டம தாகிய வமலனை யிப்படிச், சகளம தாகத் தா
ன்பூசித்தபின் சகளாசகள மாகையின் பொருட்டு, முகனு
ற செபித்தபின் முன்போல் நிட்கள, தானாக வுருசெப
தற்பணம் பண்ணி.

எ-து. நின்மலனாகிய பரமசிவனது சத்தியுபாதிகளைத் தரிசித்தல் பூசை இப்படிச் சகளபூசை பண்ணினபின்பு அந்தச் சத்தியுபாதிகளையும் அவற்றை நடத்தும் சிவோபாதிகளையும் பின்னமறத் தரிசித்தல செப தற்பணமெனபதாம்.

பஞ்ச கிருததியத்திற்கு அப்பாற்பட்டுச் சத்தியுபாதி சிவவுபாதிகளற்று முன்புள்ளநிட்கள பாவத்தைத் தரிசிப்பது செப தற்பணம். (௧௪௮)

தானுவை விட்டுந் தான்பிரி யாமல், வேறு மென்று
மீளவும் பூசித் தலைவற வேதா னமல னிடத்தினிலைபெ
ற வேண்டித் தனை நிவேதித்து.

எ-து- கிருத்திய காரணமான பரசிவத்தை யடைந்தவன் மீண்டும் பஞ்ச கிருத்தியத்தில் அகப்படா திருத்தலையே அட்டபுட்பமாகச் சாத்தி ஆன்மகாரியமாகச் சிவனுபாதியடைந்தாலும் ஆன்மா சிவோபாதியைப் பொருந்தாமல் அதற்கதீதமாய் அலைவற்று நின்மலமாயுள்ள பரசிவத்தில் சலமற்றிருப்பதே ஆன்ம நிவேதன மென்பதாம். (௧௪௯)

அசுத்ததத்துவங்களை யன்னியமாக்கி, யுறச்சிவன் பரிபூ

ரணமுமா வளவு, மிகுந்துணர் ஞான விழியாற் பார்
ந்து, நிலைபெறு சுத்தமு மாயநின் மலமாய், நலைசத்
தியமாய், ஞான மயமா, யாதி யந்த மோதுவ தன்று,
யாதொன் றினும்பிறி வின்மை யுடைத்தாய, முந்நூற்
றறுபான் மூன்று மெனச்சொலு, நூற்ச மயிக ளாலறி
வரிதாய்ச், சாந்தமு மாயுரை தருநிட் களமா, யேந்தா
னந்தமு மாயக னியமாய், நியதி காலங் களைநீங் கியதா
ய்த், தூயாதீத காரிய சூனிய மாகிக், காரண சூனிய மாகி
ந கம்பமற் , றுரையுணர் விறந்த தாகி யுயர்ந்த, பரம
சிவனது பாங்கினி லாங்கே, திருமிகு ஞான நேத்திரஞ்
சேர்த்திச, சேருமின் னிலையைத திவ்விய ஞானத,
தாலறி கல்பரா முகவருக கிபரமே.

எ-து. பந்தமாயுள்ள முப்பத்தொரு தத்துவங்களையும் அன்னியமாக்கிக் கிரியையாகிய சுத்தவித்தியா புவனத்திலிருந்து மயேசுர முதலஞ்ஞானமீறான சிவோபாதிகளையும் இவற்றில் வியாபித்திருக்கும் பரிபூரணமாகிய பரசிவத்தையும் மேலான அறிவினாலறிந்து தானதற்கதீதமாயிருந்து அதிசுத்தமாய் மலரகிதமாய் நல்லவுண்மையாய் அனுபவமேவடிவாய் முதல்நடு இறுதியற்றதாய்ச் சர்வான்மாக்களுக்கும் உயிர்க்குயிராய் மாயாவாதிமுதல் ஐக்கியவாதியீறான முந்நூற்றறுபத்துமூன்று சமயிகளாலும் அளவிடுதற்கரிதாய் விகாரமற்றதாய் நிட்களமென்று சொல்லப்பட் டுள்ளதாய் வேறுபாடில்லாததாய்க் காலநியதிக்கப் பாலாய்ப் போகத்தை நீக்குங் காரிய

தத்துவமான நாதவிந்துக்களுக்கப்பாலாய் அதற்குக்காரணமான ஞான க்கிரியைகளை நீங்கியுற்றதாய் அசைவற்று வாக்குமனதீத கோசரமாய் மேலான அனுபவ சிவனிடத்தில் நன்மைமிகுந்த அருளைக் காலடைந்து அப்படி அனுபவ நிலையையடைந்த தன்மையு மழிந்து நிற்பது பராமுக வருக்கியமென்பதாம. (௧௫௦)

இந்த நிலையிற் றரிசன மென்று, மந்தா திருப்பது ஞா
ன பூசை, யந்தரி யாகமு மாம்புற யாகமு, மிந்த நெறி
பிறி விலலா தாதலிற், புந்தியில ஞான பூசையென றது
வே.

எ-து. கீழ்ச்சொன்ன தரிசனம் அந்தரியாக பூசையாதலால் ஞானக்கிரியை சேர்ந்து தொழிலுடன் கூடியுள்ள பகிர்முகமாகிற கிரியாபூசையிலும் இந்தத் தரிசனம் ஒழியாதிருத்தலால் அந்த விரு வகைப்பட்ட பூசைகளு மொருதன்மையாயறிதல் ஞானபூசை இந்தத் தரிசனமன்றிப் பகிர்யாகமாகிற கிரியாபூசையே பிரதானமாய் அந்தர்யாகத்திற் சிறிது தரிசனமுங்கூடி அந்தர்யாக மென்றும் பகிர்யாகமென்றும் பூசிப்பது பொய்யாத கிரியாபூசை யெனபதாம். (௧௫௧)

இப்படி யிடையற விதய கமலத், தற்புத முதல்வனை ய
ருச்சனை புரிபவர், தப்பற வடைகுவர் சாயுச்சியமே.

எ-து. இப்படிச் சொல்லப்பட்ட தரிசனமாகிய ஞானபூசையிலே அற்புதமுதல்வனாகிய அனுபோகசிவனைப் பூசைபண்ணுஞ் சீவன்முத்தர் நிலைபேறான சாயுச்சியமே பெறுகை சந்தேகமில்லை யென்பதாம். (௧௫௨)

சதாசிவநாயனார் ஆதனம் மூர்த்தி மூலம் முதலிய வருமாறு. தானம் பதுமமாம்; அதன்கிழங்கு பிருதுவியாம்; அப்பு தேயு வாயு ஆகாயம்-சோத்திரம் தொக்கு சட்சு சிங்ஙுவை ஆக்ராணம - சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் - வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் - மனம் புத்தி ஆங்காரம் சித்தம்-புருடன் ராகம் வித்தை நியதி காலம் கலை இவை யிருபத்தொன்பதும் நாளமாம்; அமரேசன்முதல் சிவே தனீறான புவனம் எழுபத்திரண்டும் நாளத்தின் முள்ளுகளாம்; புத்திகுணமாகச் சொல்லப்பட்ட பஞ்சாசற்பாவம் நாளத்தின் சூத்திரமானநூலாம், புறவிதழைச் சுமந்துநிற்கும் முடிச்சுப்படம் மாயையாம்; உள்ளிதழ் சுத்தவித்தையாம்; கலாசத்திகள் அறுபத்துநாலுங் கேசரமாம்; மகேசுரம் காயில்வட்டமாம்; சதாசிவம் விதையாம்; வட்டம் சத்தியாம்; இங்ஙனம் பிருதுவிமுதல் சத்தியீறான முப்பத்தைந்து தத்துவங்களும் சதாசிவநாயனாருக்கு ஆதனமாம்.

அபரவிந்துகலைகளும் அபரநாதகலைகளும் பரவிந்துகலைகளும் பரநாதகலைகளும் பஞ்சசத்திகளும் சதாசிவநாயனாருக்குமூர்த்தியாம்.

பிருதுவிமுதல் சமனையீறாக வியாபிக்கும் பரமசிவன் சதாசிவநாயனாருக்கு மூலமாம்.

திருவிழா வரலாறு - முதல்விழா பிரகிருதிநடனம், இரண்டாம்விழா இருவினைநடனம், மூன்றாம்விழா முக்குணநடனம், நாலாம்விழா அந்தக்கரணநடனம், ஐந்தாம்விழா பஞ்சேந்திரிய நடனம், ஆறாம்விழா காமாதியாரண நடனம், ஏழாம்விழா சப்தகோடி மகாமந்திரபத நடனம், எட்டாம்விழா வித்தியாதத்துவமும் ஆணவமும் நடனம். திருக்காப்புநாள் திரோதாயிநடனம், திருச்சாந்து திருவெழுச்சியில் நவபதநடனம், திருவுலாப் புறத்தில் சத்திமுத்தி நடனம் திருமணர்தலில் வாதனைநடனம், பத்தாம் விழாவில் பேரின்பாநித நடனம், பதினோராம்விழாவில் பதிபசுபாச நடனம்.

சதாசிவரூபஞ்சம்பூரணம்.

உ

சிவமயம்.

# புத்தகவிளம்பரம்.

---

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஜீவரக்ஷாமிர்தம் ... | 5 | 8 | 0 |
| தைலவருக்கச்சுருக்கம் | 1 | 8 | 0 |
| சிதம்பரசபாநாதபுராணம் ... ... | 1 | 0 | 0 |
| சீகாழித்தலபுராணம் | 1 | 0 | 0 |
| சிவகர்ணாமிர்தம் ... | 0 | 12 | 0 |
| நீர்நிறக்குறிநெய்க்குறிசாத்திரமூலமுமுரையும் | 0 | 8 | 0 |
| சதாசிவரூபமூலமுமுரையும் | 0 | 2 | 0 |
| சிவராத்திரிபுராணவசனம் ... ... | 0 | 2 | 0 |
| சடாட்சரமாறல்யந்திரங்களுடன் ... ... | 0 | 2 | 0 |
| திருவாலங்காட்டுபுராணச்சுருக்கம் ... | 0 | 2 | 0 |
| வடதிருமுல்லைவாயலந்தாதி ... ... | 0 | 1 | 0 |
| திருத்தணிகை யாற்றுப்படை ... ... | 0 | 1 | 0 |
| மாலையந்தாதி ... | 0 | 1 | 0 |
| சித்தாந்தக்கட்டளை | 0 | 1 | 0 |
| சத்துருசங்காரவேற்பதிகம் ... ... | 0 | 0 | 6 |
| இடும்பன்கவசம், கடம்பன்கவசம் | 0 | 0 | 6 |
| நால்வர்தாலாட்டு | 0 | 0 | 6 |
| நெஞ்சவிடுதூது | 0 | 0 | 3 |
| திருவாலங்காட்டு வூர்த்ததாண்டவர் தோத்திரப்பா, கணபதிநாமாவளியுடன் ... | 0 | 0 | 3 |
| "விட்டுணுஅவதாணபரிகார" நிக்கிரகம் | 0 | 0 | 3 |
| காந்தமகாசங்கிரகம் | 0 | 2 | 0 |
| திருமுருகாற்றுப்படை மூலமும், பரிமேலழகருரையும் | 0 | 2 | 0 |

சென்னை வைதிக சுத்தாத்வித சித்தாந்த சைவசபையின்

காரியதரிசியாகிய,

**வல்லை - சண்முகசுந்தர முதலியார்.**

15 - முத்துகிருஷ்ணன்வீதி, பெத்துநாய்க்கன் பேட்டை.